பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 02 புதன்கிழமை (18.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 357

# ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி 23 இல்?

# அறிவிப்பு எந்த வேளையிலும் வரலாம்!

## மூத்த அமைச்சர்கள், அரச பங்காளிக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்களுடன் நேற்று மந்திராலோசனை

கொழும்பு, நவம்பர் 18

**ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்றும் -**

**அதனை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 23 ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் -**

**இன்று முன்னிரவு வெளியான தகவல்கள் தெரிவித்தன.**

**எனினும் இச்செய்தி எழுதப்படும் வரை அந்தத் தகவல்கள் முற்றாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.**

இன்று 18 ஆம் திகதி தமது 64 ஆவது பிறந்த தினத்தில் அல்லது நாளை ஜனாதிபதி தமது அறிவிப்பைச் செய்வார் என்றும் அரச வட்டாரங்களால் ஊகம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தேர்தல் பிரசார வேலைகளை இன்று புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்குமாறு ஸ்ரீ.ல.சு.கட்சியின் மாவட்ட

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதையூடாக தனியார் லொறிகள் சென்றுவர அனுமதி

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் லொறிகள் ஏ-9 பாதையூடாக போக்குவரத்து சேவையை மேற்கொள்ள அனுமதி வழங்க ப்பட்டுள்ளது.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட இந்த லொறிகளை இன்று நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் வாகனத் தொடரணியுடன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார சபையின் வேலை நிறுத்தம் வெள்ளிக்கிழமை வரை தொடரும்

கொழும்பு, நவ. 18

இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கம் தமது சட்டப்படி தொழிற்சங்க வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றது - என்று மின்சாரசேவை சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலார் தெரிவித்துள்ளார்.

எரிபொருள், நீர் மற்றும் துறைமுகத்தின் தொழிற்சங்கங்கள் சட்டப்படி தமது வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்

(20ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் வைத்து கைது செய்யப்பட்டோர் விவரம் வவுனியா செயலகத்தில் பார்வைக்கு

### பஸில் ராஜபக்ஷ நடவடிக்கை

கொழும்பு, நவ.18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியிருந்த வேளை, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் விவரங்கள் வவுனியா செயலகத்தில் காட்சிப்படுத்தப்படும்.

வன்னி சென்று திரும்பிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஸில் ராஜ

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணக்கீட்டுக் கல்வியும் வணிகமும் I, கணிதம் I பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் - I,II, கணிதம்II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

# குடாநாட்டுப் பயணிகள் மீதான பாதுகாப்பு கட்டுப்பாடுகளை எதிர்த்து தொடரப்பட்ட மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டது

## இணக்கமான தீர்வைக் காண உயர்நீதிமன்றம் அவகாசம்

கொழும்பு, நவ.18

யாழ்.குடாநாட்டிலிருந்து பயணிகள் கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் செல்வதற்குப் படையினரின் பாதுகாப்பு முன் அனுமதி (''கிளியரன்ஸ்'') பெறவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் படையினரின் கெடுபிடி நடவடிக்கையை - விதிமுறையை - ஆட்சேபித்து, தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொள்வது என நேற்று முடிவு செய்தது.

இந்த மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் சலீம் மார்சூக், எம்.ஐ. இமாம், கே.பி.ரட்ணாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே விசா

(20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி (கிளியரன்ஸ்) தேவையில்லை

### ஆளுநர் சந்திரசிறி பணிப்புரை

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு நடைமுறையில் இருந்த, பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பு அனுமதி முறை (''கிளியரன்ஸ்'') இன்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையை வடக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு ஐ.நா. உதவ வேண்டும்

### யாழ்.வந்த ஜோன் ஹோம்ஸ்ூடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளில் கணிசமானோர் குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களின் மறுவாழ்வுக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவவேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் ஜோன் ஹோம்ஸ்ூடம் மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அவர் யாழ். அரச அதிபர் கே.கணேஷைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் பின்னர் நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான குழு உறுப்பினர்களை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து குடாநாட்டு நிலைமை குறித்துக் கேட்டறிந்தார்.

அவரிடம் குழுவினர் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

(20ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியேற்றப்பட்ட அகதிகளில் குடும்பத் தலைவர்கள் பலரை புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறுவோர் கைது செய்கின்றனர்

### தடுத்து நிறுத்துமாறு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றில் கோரிக்கை

கொழும்பு,நவ.18

வன்னியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள அகதிகளின் குடும்பத் தலைவர்கள் பலர் புலனாய்வுப் பிரிவினர் என்று கூறப்படுபவர்களால் கைது செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் [illegible] றிய கூட்டமைப்பு எம்.பி. துரைரட்ணசிங்கமே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னியிலிருந்து வந்த சுகாதாரப் பணியாளர்கள் மீளத்திரும்ப பயண அனுமதி பெறுவதில் சிக்கல்

வலி.மேற்கு, நவ.18

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிவந்த சுகாதாரப் பணியாளர்கள் வன்னிப் பகுதியில் மீளவும் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு என பயண அனுமதி பெறமுடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

பயண அனுமதிக்காக வலி.மேற்கு மாவடி சிவில் இராணுவ காரியாலயத்திற்கு சென்ற பணியாளர்களுக்கே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறிய மக்களின் குடும்ப அட்டையில் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் கையொப்பங்கள் இடப்பட்டுள்ள நிலையில் இராணுவ அதிகாரியின் கையொப்பம் இல்லை என காரணம் கூறியே இவர்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் உடனடியாகவே தமது கடமைகளை மீளவும் பொறுப்பேற்கும்படி கோரிய கடிதம் உரிய பணியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் அக் கடிதம் மூலமாக பயண ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தும் இந் நிலைமை ஏற்பட்டிருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிவரும் ஆசிரியர்கள், நிர்வாகப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மீள குடியேற்றப்பட்ட வன்னிப் பகுதியில் தமது கடமைகளை மீளப் பொறுப்பேற்கும்படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (1-112)

# எதிரணியைச் சேர்ந்த சோதிடர்களின் உயிருக்குக் கூட இலங்கையில் உத்தரவாதம் இல்லை; அமெரிக்கப் பத்திரிகை சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.18

இலங்கையின் அரசியலில் எதிரணியைச் சேர்ந்த சோதிடரின் உயிருக்குக்கூட உத்தரவாதம் கிடையாது என்று உலகின் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 'வாஷிங்ரன் போஸ்ற்' நேற்று செய்தி வெளியிட்டது.

தென்னிலங்கையின் பிரபல சோதிடரான சந்திரஸ்ரீ பண்டார இலங்கையின் எதிர்கால அரசியல் குறித்து குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலம் குறித்து எதிர்வு கூறியதை அடுத்து அரசுத் தரப்பினரிடமிருந்து தொடர்ச்சியான உயிராபத்தை எதிர்நோக்கி வருகின்றார் என்று அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொல்லப்படலாம் அல்லது பதவியிலிருந்து தூக்கியெறியப்படலாம் என்று சோதிடர் சந்திரஸ்ரீ பண்டார எதிர்வு கூறியுள்ளார்.

இந்த எதிர்வுகூறலை அடுத்து நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சோதிடர் சந்திரஸ்ரீ பண்டார குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நாலாம் மாடியில் 9 நாள்கள் வரை தடுத்து வைக்கப்பட்டார்.

ஆனால் அவருக்கு எதிரான வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. ஆயினும் இச் சோதிடரின் உயிருக்கு இனியும் உத்தரவாதம் இல்லை என்று அமெரிக்காவிலிருந்து வெளியாகும் மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

'எனது ஜாதகத்தை நானே கணித்தேன். எனக்கு நீண்ட ஆயுள் இல்லை என்று ஜாதகம் தெரிவிக்கின்றது. நான் அரசைச் சேர்ந்த ஒருவரால் 2012 ஆம் ஆண்டுக்குள் கொல்லப்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது." - என்று சோதிடர் சந்திரஸ்ரீ இப்பத்திரிகைக்குத் தெரிவித்தகருத்தும் 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகையில் அப்படியே பிரசுரமாகியுள்ளது.


## வாழ்த்துகிறோம்



எங்கள் தேவஸ்தானத் திருப்பணிகளில்
மிகவும் ஆர்வத்துடன் செயற்படுகின்ற
திரு. ஆறுமுகநாதன் ஜனார்த்தனன்
அவர்களுக்கு தொழிற்திறன்
வல்லுநர்களுக்கான ஜனாதிபதி விருது
கிடைத்தமை குறித்து எமது இதயபூர்வமான
வாழ்த்துக்கள் உரித்தாகுக.

*நிர்வாக சபை,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

(G/962467)


# யாழ்.நூலகத்தில் 84 இல் பொருத்தப்பட்ட நினைவுக்கல்லை மீள அமைக்க வேண்டும்

## முன்னாள் ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாண பொது நூலகத்தில் 1984 இல் அமைக்கப்பட்ட நினைவுக் கல்லை மீண்டும் அதே இடத்தில் பொருத்துவதற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாநகரசபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் மாநகர முதல்வரிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக மாநகரசபையினருக்கு ஏற்கனவே கடிதம் மூலம் வேண்டுகை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்தார்.

1984 ஆம் ஆண்டு மீளமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுநூலகம் முன்னாள் காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான அ.அமிர்தலிங்கத்தால் திறந்துவைக்கப்பட்டது.

இதன்போது பொருத்தப்பட்ட நினைவுக் கல்லை மீண்டும் அதேஇடத்தில் பொருத்தி மீள் திறப்பும் செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (1-10)

# ஹாட்லிக் கல்லூரியில் நேற்று உணர்வுபூர்வ நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 18

1999 ஆம் ஆண்டு 17 ஆம் திகதி இன் பருட்டிக்கடலில் ஆய்வில் ஈடுபட்டிருந்த போது அகாலமரணமடைந்த 4 மாணவர்களினதும் 2004 ஆம் ஆண்டு பேராதனையில் ரயில் விபத்தில் அகால மரணமடைந்த மாணவரினதும் நினைவுதின நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஹாட்லிக் கல்லூரியிலும், மற்றும் வை.எம்.சி.ஏ மண்டபத்திலும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

ஹாட்லிக்கல்லூரி அதிபர் ந. தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன், வட. இந்து மகளிர் கல்லூரி அதிபர் சீதா சண்முகநாதன், இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ். சண்முகநாதன் ஆகியோர் நினைவுப் பேருரைகளை ஆற்றினர்.

நிகழ்வின் போது ஹாட்லிக்கல்லூரி, வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை பெண்கள் உயர் கல்லூரி ஆகியவற்றிற்கு அறிவு சார் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

தொடர்ந்து அகாலமரணமடைந்த மாணவர்களின் திருவுருவப்படங்கள் அவர்களது பெற்றோருக்கு வழங்கப்பட்டதுடன் புலமைப் பரிசில் சாதனையாளர்கள் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப் பட்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என 150 பேருக்கு மேற்பட்டவர்கள் இரத்ததானம் வழங்கினர்.

இந்த நிகழ்வுக்கான நிதி உதவிகளை கனடா, லண்டன், ஆவுஸ்திரேலிய மாணவர் ஒன்றியங்களும் பழைய மாணவர்களும் வழங்கியிருந்தனர். (1-10-70)


## பிறந்த நாள் வாழ்த்தும் பாராட்டு வாழ்த்தும்



இன்று அகவை10 செல்வி ஆஷிகா பிரகலாதனன்

யா/ வரணி மகாவித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி பயிலும் வரணி வடக்கு வரணியைச் சேர்ந்த திரு.மு. பிரகலாதனன் - ராதா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி செல்வி ஆஷிகா பிரகலாதனன் அவர்களை 2009 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடம் பெற்றமைக்கும், இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும், அம்மப்பாவையும் பாராட்டி இவர் கல்வியில் மேலும் முன்னேற மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பெற்றோர்கள், அக்கா,
கொழும்பு அம்மம்மா, அம்மப்பா, கொழும்பு அன்ரா,
சித்தப்பா, கனடா மாமா, மாமி, அபிஷா, அக்ஷிகா.

(90953)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 04 . 07 . 1944



உதிர்வு 19 . 10 . 2009

### திருமதி விமலசிங்கம் சந்திரோதயம்

கடந்த 19.10.2009 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (18.11.2009) புதன்கிழமை மு.ப 11 மணியளவில்அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.மேலும் எமது குடும்பத் தலைவி நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது சிகிச்சை அளித்த யாழ். போதனா வைத்தியசாலை 26 ஆம் விடுதி வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலி,மலர் வளையம் வைத்து, துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி செய்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அராலி வீதி,*
*சங்கானை.*

(91157)

குடும்பத்தினர்.
0779313502



## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். (சுத்தம் செய்தல் இலவசம்)
1Kg- 300/=
A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில்.


## சாரதிப் பயிற்சி நெறி

வண்ணை., நவ.18

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்படும் சாரதிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகளில் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்த இளைஞர், யுவதிகளை அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (1-160)


## மரண அறிவித்தல்

### சண்முகம் சிவபாலசேகரம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவபாலசேகரம் நேற்று(17.11.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் மல்லிகா தம்பதியரின் அன்பு மகனும் கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவயோகத்தின் (ஆசிரியை, யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை) அன்புக் கணவரும் கயந்தினி (ஆசிரியை, யா/கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை), அனந் (மாணவன், 2010 A/L கணிதப்பிரிவு, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரபாலன் (கொழும்பு), இந்திரபாலன்(கனடா), சிவரதி(பிரான்ஸ்), அமரர் வேல்ராஜ், அருள்ராஜ் (கனடா) ஆகியோரின் சகோதரனும் சரஸ்வதி, பரமேஸ்வரி, கனகாம்பிகை, சிவபாக்கியம் (ஓய்வு பெற்ற தபாலதிபர், சாவகச்சேரி), செல்வராணி (ஆசிரியை, சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி), கமலராணி, சசிகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.11.2009) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.*

(91176)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீதி விசாரணைகளின்றி சிறைக்குள் வாழும் அவலத்துக்கு முடிவு எப்போது?

நாடு முழுவதிலும் உள்ள ஆயிரத்துக்கும் அதிகமான அரசியல் கைதிகள் நேற்றுமுன்தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்திருக்கின்றார்கள்.

இதேசமயம், கொழும்பு மக்ஸின் சிறைச்சாலையில் கைதிகள் மீது அண்மையில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்தும், அரசியல் கைதிகளுக்கு எதிரான விசாரணைகளை உடன் நடத்துங்கள் அல்லது அவர்களை விடுவியுங்கள் என்று கோரியும் நேற்று அந்தச் சிறைச்சாலைக்கு முன்பதாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் ஜனநாயக மக்கள் முன்னணியினால் நடத்தப்பட்டது.

சிறைக் கம்பிகளுக்குப் பின்னால், இருண்ட சூனியத்துக்குள், வாழ்வு சிதைக்கப்பட்ட நிலையில், வருடக் கணக்கில் தனிமையில் வாடி வதங்கிப் பரிதவிக்கும் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகளின் பரிதாப நிலை குறித்து இங்கு கவலைப்படுவோர் மிக மிகக் குறைவு.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவை வழங்கிய மிதமிஞ்சிய அதிகாரம் காரணமாக, உயர் பதவி நிலையில் இருப்போர் இப்படிப் பல நூற்றுக்கணக்கானோரை - இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால், மூடிய சிறைக் கூடங்களுக்குள் - பரிதவிக்க விட்டு விட்டு, தம் பொழுதைக் கழிக்கின்றார்கள்.

இப்படிக் காரணமின்றிப் பல நூற்றுக்கணக்கானோரைத் தடுப்புக் காவல் உத்தரவு என்ற பெயரிலும் விளக்கமறியல் என்ற பெயரிலும், விசாரணைகள் நடத்தாமல் - அல்லது விசாரணைகளை இழுத்தடித்தபடி - சிறை வைத்திருக்கும் அட்டூழியமும் ஒருவகையில் மிக மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுதாம்.

அவசரகாலச் சட்ட விதிகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விதிகள் போன்றவற்றின் கீழ் சந்தேக நபர்கள் என்ற பெயரில் சுமார் 18 மாதங்கள் வரை - கேட்டுக் கேள்வியின்றி - ஆட்களைத் தடுத்து வைக்கும் அதீத அதிகாரம் இலங்கைத் தீவின் உயர் சட்டமான அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது கூட ஒருவகையில், தார்மீக முரணான ஏற்பாடாகும்.

அந்தப் பதினெட்டு மாத கால எல்லையையும் தாண்டி வருடக்கணக்கில் - பலர் சுமார் பத்தாண்டுகள் தாண்டியும் - உரிய நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்படாமல், சிறைகளுக்குள் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தடுப்புக் காவலில் - படையினர் அல்லது பொலிஸாரின் கட்டுக்காவலில் - இருந்தசமயம் ஒருவர் வழங்கினார் என்று கூறப்படும் வாக்குமூலத்தையே அவருக்கு எதிரான சாட்சியமாகப் பயன்படுத்தி அவரை மோசமான தண்டனைக்கு ஆளாக்கும் 'உயர்ந்த' நீதிமுறைமை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இலங்கையில் நடைமுறையில் உள்ளது.

அப்படியான - அதீத அதிகாரம் வழங்குகின்ற - சட்டங்களையும், நீதிமுறைமைகளையும் வைத்துக்கொண்டும் கூட, இப்படி வழக்குத் தாக்கல் செய்யாமல் - அல்லது வழக்குத் தாக்கல் செய்தாலும் விசாரணைகளைத் தொடராமல் - அல்லது விசாரணைகளை ஆரம்பித்தாலும் விசாரணைத் திகதிகளை நீண்ட நாள்களுக்குத் தள்ளிப்போட்டு இழுத்தடித்தபடி - காலத்தை வேண்டுமென்றே கடத்தி, இந்தக் கைதிகளின் முழு வாழ்வையுமே சிறைக்குள் பாழடித்து முடக்குவது, மிகப் பெரும் கொடூரமாகும்; குரூரமாகும்.

இந்தக் கைதிகளில் பெரும்பாலானவர்கள் தமது இளம் வயதில் உள்ளவர்கள். அவர்களின் வாழ்வில் வசந்தம் வீசக்கூடிய இளமைப் பருவத்தை இப்படி சிறைக்குள் அர்த்தமின்றி முடக்குவது - நீதி, நியாயமின்றி வெறும் சந்தேகத்தின் பேரில் முடக்குவது - மிகப் பெரும் அநியாயமாகும்; அநீதியாகும்.

இப்படித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் உண்மையில் குற்றம் இழைத்தவர்கள் என்று அரசு கருதுமானால் - சட்டத்தின் கீழ் அதனை நிரூபிப்பதற்கான உரிய ஆதாரங்கள் அரசிடம் இருக்குமானால் - அத்தகையோருக்கு எதிராகத் தாமதமின்றி வழக்குத் தொடர்ந்து, குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்து, காலத்தை இழுத்தடிக்காமல் விசாரணைகளை நடத்தி முடிக்க வேண்டும். அத்தகையோர் விடயத்தில் நீதி தனது நடவடிக்கையை மேற்கொள்ளட்டும். அதில் தப்பில்லை.

குற்றம் இழைத்தார்கள் என்று நிரூபிப்பதற்கு - அல்லது குற்றம் சுமத்துவதற்கு - போதிய ஆதாரங்கள் இல்லாதவிடத்து அத்தகையோரை விரைந்து விடுதலை செய்யுங்கள்.

அதை விட்டு விட்டு, அவர்களை வெறுமனே 'சந்தேக நபர்கள்' என்று முத்திரை குத்திவிட்டு, அவர்கள் தொடர்பான விசாரணைக் கோப்புகளை, தூக்கித் தூசுபடிய கடாசி விட்டு, தடுப்புக்காவல், விளக்கமறியல் என்ற பெயரில் பல்லாண்டுகளாக சிறைக்குள் அவர்களை முடக்கி வைக்காதீர்கள். அது நியாயமல்ல.

ஒன்றில் அவர்கள் மீது வழக்குப்போட்டு, துரித விசாரணை நடத்தி, ஒரு முடிவை எடுங்கள். அல்லது அவர்களைக் காலதாமதப்படுத்தாது விடுவியுங்கள்.

இதைக் கோரித்தான் இந்த சிறைக் கைதிகள் நேற்றுமுன்தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

இந்தக் கைதிகளின் விசும்பல் நீதி தேவதையின் காதில் விழுமா? இவர்களுக்கு நியாயம் கிட்டுமா?

இலங்கையின் நீதி முறைமையின் பெயரால் பல நூறு பேரின் - ஆயிரத்துக்கும் அதிகமானோரின் - வாழ்க்கையை 'சந்தேகத்தின்' பெயரால் பல்லாண்டுகளாக சிறைக்குள் முடக்கும் கேவலத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியம்.

# வீதியின் இரு மருங்கும் இரும்புகள் கொட்டப்படுவதால் யாழ். ஐந்து சந்திப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி




யாழ்ப்பாணம்,நவ. 18

ஐந்து சந்தியை அண்மித்துள்ள மானிப்பாய் வீதியின் இருபக்கங்களிலும் பெருமளவான கழிவு இரும்புகள் கொட்டப்படுவதாலும் அவ்விடத்திலே லொறிகளை வீதியின் இருபுறமும் நிறுத்தி வைக்கப்பட்டு தினமும் இரும்பு ஏற்றப்படுவதனாலும், அவ் வீதி வழியான போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டிருப்பதாக பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி வியாபாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், தென் பகுதி வியாபாரிகள் வடபகுதியிலுள்ள கழிவு இரும்புகளை தென்பகுதிக்கு அனுப்பும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர்.

இதன் காரணமாகவே, யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்படும் கழிவு இரும்புகள் தினமும் குறித்த வீதியின் இரு பக்கங்களிலும் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன. பின்னர் அவ்விடத்திலே பல லொறிகளை நிறுத்தி காலை முதல் இரவு எட்டுமணிவரையும் அவை ஏற்றப்படுகின்றன. இது ஒரு வழமையான செயற்பாடாக மாறி இருக்கின்றது.



எனவே இதுகுறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுத்து இடையூறு இன்றி மக்கள் பயணிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடபகுதியிலிருந்து தினமும் சுமார் 35 ஆயிரம் கிலோ இரும்புகள் மூன்று அல்லது நான்கு லொறிகளில் ஏற்றப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (04-14)

# மாணவர் அனுமதிக்காகப் பணம் வசூலிப்பது பற்றி பெற்றோர் எழுத்து மூலமான முறைப்பாடு தந்தால் நடவடிக்கை

## வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ. 18

மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கும் போது பணம் கேட்கும் பாடசாலை அதிபர்கள் பற்றி சம்பந்தப்பட்ட பெற்றோர் கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்தகவலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் 'உதயனுக்'குத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலைகளில் புதிய கல்வி ஆண்டு கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் .

அத்துடன் நலன்புரிநிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களும் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் மாணவர்கள் அனுமதியின்போது சில பாடசாலைகள் நிதி அறவிடுவதாக எமக்கு தெரிய வந்துள்ளது.

குறிப்பாக நலன்புரிநிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களிடமும் பணம் வசூலிக்கப்படுவதாக அறிகிறோம்.

இத்தகைய செயற்பாடுகளை தடுத்து நிறுத்தும் முகமாக பாடசாலை அதிபர்கள் மாணவர் அனுமதிக்காக பணம் கேட்கப்படும் இடத்து அது தொடர்பான விவரங்களை எழுத்து மூலம் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு அறிவித்தால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு எதிராக சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை - பாடசாலை அனுமதிக்கு பணம் கேட்கும் அதிபர்கள் தொடர்பான எழுத்து மூலமான முறைப்பாடுகள் இதுவரைக்கும் எமக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் என்றார். (04-09)

# தரம் 5 மாணவர்கள் வைப்புக்கணக்குப் படிவங்களை இன்று சமர்ப்பிக்கவும்

யாழ்ப்பாணம், நவ. 18

நலன்புரி நிலையங்களில் இருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் தமக்கான வைப்புக் கணக்குப் படிவங்களை நிரப்பி இன்று புதன்கிழமை வலயக் கல்விப்பணிமனையில் சமர்ப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

நலன்புரி நியைங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் புலமைப் பரிசில் மாணவர்களே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-15)

# கட்டுரைப் போட்டியில் மெதடிஸ் மாணவிக்கு அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், நவ.18

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சின் அனுசரணையுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் உலக குடியிருப்பு தினத்தையொட்டி "எமது நகரத்தின் எதிர்காலத்தை திட்டமிடுவோம்" என்ற தொனிப்பொருளில் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 11-13 பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி பிரியங்கா ஆனந்தேஸ்வரன் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

நீர்கொழும்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் மாணவிக்குரிய பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி புனித பூமிகள் அபிவிருத்தி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, நகர அபிவிருத்தி அமைச்சர் ரோஹண தகநாயக்க மற்றும் வீடமைப்பு அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரன்னதுங்க தேசிய வீடமைப்பு அதிகார சபை பொது முகாமையாளர் எல்.எஸ். பவன் சூரிய உட்பட்ப் பலர் கலந்துகொண்டனர். (04-9)

# மீளக்குடியமர்ந்துள்ள 427 மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ.18

நலன்புரிநிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களில் யாழ். கல்வி வலயத்தில் இருந்து 427 பேர் இம்முறை டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இத்தகவலை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் 'உதயனுக்'குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இம்முறை டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்கு நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களும் தோற்றுவதற்கான நடவடிக்கைகளை யாழ். கல்வி வலயம் மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் 427 பேர் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதில் கடந்த ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட விசேட பரீட்சைக்கு வன்னியில் இருந்து தோற்றாத மாணவர்கள் 134 பேர் கணித பாடத்துக்கு இம்முறை தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை - நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் இம்முறை நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இதுவரையும் விண்ணப்பிக்காத பாடசாலை, தனிப்பட்ட மற்றும் இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை நாளை வியாழக்கிழமை நண்பகல்12 மணிக்கு முன்னர் யாழ்.கல்வி வலயத்தில் கையளிக்கலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார். (04-9)

# குறிகாட்டுவான் துறைமுகத்திலுள்ள நீர்த்தாங்கிக்கு சாட்டியிலிருந்து தண்ணீர் எடுத்து வருவது சாத்தியமற்றது

நல்லூர், நவ. 18

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கிக்கு வேலணை சாட்டியிலிருந்து குடிதண்ணீர் எடுத்துவந்து நிரப்புவது சாத்தியமற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தண்ணீர்தாங்கியில் குடிதண்ணீர் நிரப்பப்படுவதில்லை எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாங்கியில் 400 லீற்றர் தண்ணீரை மட்டுமே நிரப்பக்கூடியதாக உள்ளது.

புங்குடுதீவிலிருந்து சாட்டிக்குச் சென்று தண்ணீரை எடுத்து வந்து இந்தத் தாங்கியை நிரப்புவதற்கு மிகவும் கூடுதலான செலவு ஏற்படுகின்றது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

புங்குடுதீவில் கிடைக்கக் கூடிய தண்ணீரையே இங்கு நிரப்ப வேண்டிய நிலையில் அங்கு கிடைக்கக் கூடிய தண்ணீரை மேற்படி தாங்கியில் நிரப்புவதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் மறுப்பதாகவும் கூறப்படுகின்றது. (04-111)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 03 19.11.2009 வியாழக்கிழமை |
| திதி: | திருதியை பி.இ. 03.54 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை மு.ப 09.32 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒய்வு நேர வேலைவாய்ப்பு

பிரதேச ரீதியாக வர்த்தக, பொருளாதார ஆய்வுகளுக்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக க.பொ.த உயர்தரம் கற்ற இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்குத் தரவுகள் சேகரித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல் தொடர்பான குறுகிய காலப் பயிற்சி.

★ ஒப்பந்த அடிப்படையில் கொடுப்பனவு.

இணைந்து, பணிசெய்து பயனடைய விரும்பும் இளைஞர்கள் சுயவிவரத்துடன் விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

(சி/562455) **இல/3960 மே/பா உதயன்.**

## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி தேவகி அவர்களின் அன்புக்கணவர்

**இளையதம்பி ஜெயராஜசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு கண்ணீர் அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டிக் கொள்வதோடு குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.* (91183) மாவட்ட வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி.சிவயோகம் சிவபாலசேகரம் அவர்களின் அன்புக்கணவர்

**சண்முகம் சிவபால சேகரம்**

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை. (91181) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.சங்கத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றோசம்மா சபாரத்தினம்



உடுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மா சபாரத்தினம் 13.11.2009 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் முருகுப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் அமரர் கார்த்திகேசு சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் வசந்தமனோகரி, வதனபாஸ்கரன், வதனபாஸ்கரி, வதனராணி, வனித்தா, லிண்டா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவீந்திரன், சுகுனா, குமாரகுலசிங்கம், ஜெயகுமாரன், உதயசேகர், ரவிராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுதர்ஷன், கபிலன், ஜெனின், ஜொயல், லிபதர்சினி, கஜன், தர்ஷிகன், டினோஜா, ரஜின்ந், ரஜில், சுஜித்தா, சாருஜா, அமலேஸ்ராஜ், வெலன்ரீனா, கோகுலராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளி மயானத்திற்கு இன்று (18.11.2009) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15 ஆம் கட்டை, உடுப்பிட்டி.* (சி/562461) தகவல்: குடும்பத்தினர்.

### இராசா பொன்னுத்துரை

(முன்னாள் சாரதி, இ.போ.ச.)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பொன்னுத்துரை (16.11.2009) திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் ஒழுங்கை, மல்லாகம். 0213218447 (91187) தகவல்: குடும்பத்தினர்.

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 18

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி என்பனவற்றின் யாழ்ப்பாணக் கிளைகளின் ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் நாளை வியாழக் கிழமை இடம்பெறவிருக்கும் ஆட்டத்தில் சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (1-7)

## மீள் குடியமர்ந்தவர்களுக்கு யுனிசெவ் உதவி

வண்ணை, நவ.18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தற்காலிகமாக தங்கியுள்ள 500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நேற்று யுனிசெவ் நிறுவனத்தால் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பாவனைப் பொருள்களில் கூரை விரிப்புகள், வாளிகள்,அலவாங்கு மற்றும் அரிக்கன் லாம்பு, பிளாஸ்ரிக் பேசின், சவற்கார வகைகள் என்பன அடங்கியிருந்தன.

ஏறத்தாள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 5000 ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (1-160)

## கைதடி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 18

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடிப் பொது நூலகத்தினால் நடத்தப்படும் தேசிய வாசிப்புமாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கைதடி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளன.

கைதடி, நாவற்குழி உப பணிமனைப் பொறுப்பதிகாரி சி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் வே. சிவராஜலிங்கம், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (1-7)


### தவறிவிட்டது

மாதர்சங்க ஒழுங்கை, சித்தன்கேணியைச் சேர்ந்த B.S. அன்ரனிதாஸ் என்பவரின் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் மற்றும் கணக்குப் புத்தகம் தாவடிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன.

தொடர்புக்கு : 0776283947

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் 50 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. 3 கிலோவிற்குமேல் நிறையுடைய புறொயிலர் உண்டு. அத்தோடு கல்பேட், ஊர்ச்சேவல் விற்பனை செய்யப்படுகின்றன.

தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/562469)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபையினை அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது.

தொடர்பு : 0776915066

### தேவை

சிறிய அலுவலகம் (A Room and Hall) ஒன்று நடத்துவதற் குரிய இடம் யாழ்.கச்சேரியை அண்மித்த பகுதியில் தேவைப்படுகிறது. வீட்டின் ஒரு பகுதியும் விரும்பத்தக்கது. தொடர்பு:- 0772299900

### ராஜி திருமண சேவை

இந்து கௌரவ குடும்பம் 43 வயது அத்த நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமுடைய அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற பொறியியலாளர் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை உடனடியாகத் தேவை. 158/3 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

H.P - 0774745647 Tel - 0213735980

### வெளிவந்துவிட்டது

கந்தன் கதையின் அசுரகாண்டத்து மாலைப்படலம் (உரையுடன் கூடியது)

கோவில்களில் புராணம் வாசித்துப் பயன் சொல்வதற்கு ஏற்ற முறையில் அச்சிடப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் - விலை 60 ரூபா

ஏனைய படலங்களும் இதே முறையில் வெளியாக உள்ளன.

பிரதிகள் தேவையானோர் :

இ.ஞானசுந்தரம், நெடியகாடு,
வல்வெட்டித்துறை
[illegible]
[illegible] (90955)

## தொலைந்த ஆவணங்கள்

பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு,அல்வாயில் வசிக்கும் சின்னையா சிவராசன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன குஞ்சர் கடைக்கும் நெல்லியடி சந்திக்கும் இடையில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் வடமராட்சி உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். அடையாள அட்டை இலக்கம் : 733184195 V (90957)


## கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய ஐங்கரன் அன்னதான சபை முகாமையாளர் அமரர்

**திருநாவுக்கரசு நடராசர்**

அவர்களின் மறைவைக் கேட்டு ஆழ்ந்த துயரம் அடைந்தோம். அன்னாரின் ஆத்மா ஈடேற்றமடைய எல்லாம் வல்ல பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையாரின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

*வேலணை மேற்கு.* (91189) ஐங்கரன் அன்னதானசபை, நிர்வாகத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(கற்பூர மணியம்)



கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (17.11.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருங்காலி, காரைநகர்.* (91184) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சுப்பிரமணியம் பரமேஸ்வரி



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கானை பிளாக் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பரமேஸ்வரி நேற்று (17.11.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் அமரர் சுப்பிரமணியத்தின் அருமை மனைவியும் சின்னையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சந்திரகுமார், ரஜனி, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைவாணி, பாலகிருஸ்ணன், குணசீலநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் அமரர் தருமராசா, தங்கரத்தினம், அமரர் மகாதேவன், செங்கமலர், செல்வராணி ஆகியோரின் அருமைச் சகோதரியும் லவசுயன், லதுசன், நிலக்ஷ்னி, கஜாகரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2009) புதன் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிளாக் வீதி, சங்கானை.* (91188) தகவல்: சந்திரகுமார் (மகன்).

### நடராசா சோமசுந்தரம்

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சோமசுந்தரம் நேற்று(17.11.2009) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் சௌபாக்கியவதியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன், கனகேஸ்வரி, தயாநேசன், ஆதிபுவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கருணாகரன், ஸ்ரீதரன், சாரதாதேவி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (18.11.2009) புதன்கிழமை வவுனியா இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (சி/562465) தகவல்: S.தயாநேசன் (மகன்).

### சின்னையா சண்முகராசா

(நாவலடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தா)




யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகராசா 17.11.2009 செவ்வாய்க் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*75 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.* (91185) தகவல்: ச. சிவபாக்கியம் (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீண்ட ஆயுள் வேண்டுமா? திரும்பக் கல்லூரிக்குச் சென்றுபடிப்பைத் தொடருங்கள்



எஸ்.பேராசிரியன்

தகவல் பெட்டகம்

"நீங்கள் நெடுங்காலம் உயிர் வாழ விரும்பினால், பழைய படி உங்கள் கல்லூரிக் குச் சென்று கல்வியைத் தொடருங் கள். எமது ஆய்வின்படி உயர்கல்வி அறிவுள்ளவர்கள் நெடுங்காலம் வாழ்கின்றார்கள்' என ஹார்வாட் மருத்துவக் கல்லூரி ஆய்வாளர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

மேலும் அவர்களது ஆய்வின் விளை வாக ஆச்சரியப்படும் படியான சில முக்கிய தரவுகள் வெளிவந்துள்ளன. 1981-1988 காலப் பகுதியில் உயர்கல்வித் தகைமை பெற்றவர்களின் ஆயுட்காலம் எதிர்பார்த்த ஆயுள் காலத்தைவிட 1.4 வருடங் களால் அதிகரித்திருந்ததையும், மற்றையவர்களின் அக்காலம் 0.5 வருடங்களால் மட்டுமே அதிகரித்திருந்ததையும் எடுத்துக் காட்டி யிருந்தன. அதேவேளை 1990-2000ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால அவ காசத்தில் உயர்கல்வி அறிவுள்ளவர்களின் ஆயுட் காலம் 1.6 வருடங்களால் அதிகரித்திருந்ததும், மற்றையோரது ஆயுட்கால அதிகரிப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாதிருந்ததும் எங்கள் ஆய்வில் தெரியவந்துள்ளன என்கிறார்கள் ஹார்வாட் ஆய்வாளர்கள்.

இவ்வாறு ஆயுட் காலம் நீடிப்பதால் மக்கள் தாங்கள் விரும்பிய கல்வித்தகைமைகளை அல்லது உயரிய கலாநிதிப்பட்டத்தை பெற்றுக் கொள் ளும் வாய்ப்பைப் பெறுகின்றார்கள். கல்லூரிப் படிப்பை முடித்த [illegible]ர்களின் ஆயுட் காலம் 50-75 வரு[illegible]ங்கள[illegible]வும், அதேவேளை பட்ட தாரி மேற்படிப்பு அல்லத கலாநிதிப் படிப்பை முடித்தவர்க ளின் சராசரி வயது 57-[illegible] வருடங்களாகவும் எதிர்பார்க்கப்படுகிறது

இனம், ஜாதி, மதம் மற்றும் பால் வித்தியாசமின்றி அனைவரது ஆயுட் காலமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் பட்ட போதும், கலாசார சீரழிவின் காரணமாக உயர்கல்வித் தகைமையுடையவர்களிடையே கூட எதிர்பார்த்த ஆயுள் அதிகரிப்பு காணப்படவில்லை என அந்த ஆய் வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

******





# அதிக உடற்பயிற்சி செய்யாதீர்கள்!

தினமும் தவறாது உடற்பயிற்சி என்றுள்ள ஒருவருக்கு இதயநோய் பிரச்சினை ஏற்படுமா? என்று கேட்டால் நீங்கள் இல்லை என்றுதான் சொல்வீர்கள். ஆனால் அதையும் தாண்டி இதய பாதிப்பு ஏற்படலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைக்கு மாற்றாக மிக அதிகமான உடற்பயிற்சியில் ஈடுபடுவதும் போதுமான தூக்கமின்மை கூட இதய பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

இதயத்துக்குச் சிக்கலை ஏற்படுத்தும் விஷயங்கள் என்னென்ன? அவற்றிலிருந்து நாம் நம்மை தற்காத்துக் கொள்வது எப்படி?

மன அழுத்தம்

''இன்றைக்கு நகர வாழ்க்கை முறை மன அழுத்தத்துக்கு வழிவகுப்பதாக கருத்து உள்ளது. பலரிடம் மன அழுத்த பிரச்சினை கண்டுபிடிக்கப் படாமலே போகிறது'' என்றார் மும்பை நானாவதி மருத்துவமனையைச் சேர்ந்த இதய மருத்துவ நிபு ணர் ராஜிவ் பகவத். நீண்ட தூர பயணம், ஒழுங்கற்ற நேர முறைகள், சுற்றுச் சூழல் மாசுபாடும் ஆரோக்கியக் குறைவை ஏற்படுத்து கின்றன என்று அவர் கூறுகிறார்.

'இதய நோய் பிரச்சினை ஏற்படும் வயதும் குறைந்து கொண்டே வருகிறது. மிகவும் 'பிசி'யாக இருப்பதற்கு அதாவது 'ஜெட்' வேக வாழ்க்கை முறைக்குப் பலியாவது தூக்கம்தான். நான் சில மணி நேரம் தூங்கினால் போதும் தொடர்ந்து வேலையில் ஈடுபட ஆரம்பித்துவிடுவேன் என்று பெருமை யடித்துக் கொள்ளாதீர்கள் என்கிறார்கள் மருத்துவர்கள்.

சீரான இதயத்துடிப்பு மற்றும் இயல்பான இரத்த அழுத்தத்துக்கு நல்ல தூக்கம் அவசியம்.

இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம் ஆகியவற்றைச் சீராகப் பராமரிப்பதற்கு உடம்பு அதன் சொந்த ஒழுங்கு முறை அமைப்பைக் கொண்டிருக்கின்றது.

போதுமான தூக்கமின்மை உயிர்க் கடிகாரத்தை பாதிக் கின்றது. எவ்வளவு உடற்பயிற்சி செய்தாலும் அதை ஈடு கட்ட முடியாது என்று இதய மருத்துவர் பகவத் கூறுகிறார்.

உடம்பை கச்சிதமாக வைத்திருப்பது நல்லதுதான். ஆனால் அதிகமான உடற்பயிற்சி, நன்மையை விட அதிகம் தீமையே பயக்கும் என்று இதய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். நம்மை நாமே தண்டித்துக்கொள் ளும் ஒரு முறையாக உடற்பயிற்சியை வைத்துக் கொள்ளக் கூடாது என்கிறார் யோகா நிபுணரும், உளவியல் வல்லுநருமான ருஜுதா. ''அமைதியான மன நிலையில் நீங்கள் தியானம் செய்யும்போது அது அற் புதமான பலன் தரும். அதைப்போல ஓய்வான உடம் புக்குத்தான் உடற்பயிற்சி நல்லது என்கிறார் ருஜுதா.

நீங்கள் உங்கள் உடம்புக்கு ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய மிகப் பெரிய தீங்கு ஏற்கனவே தளர்வாக உள்ள நிலையில் மேலும் கடுமையாக உடற்பயிற்சி செய்வது. ''போதுமான தூக்கம் இல்லாதவர்களுக்கு உள் உடலியல் செயற்பாட்டு வேகம் குறைகிறது. எனவே அவர்களால் எடையையும் குறைக்க முடியாது. மாறாக அவர்கள் 'பொதுபொது' என்று ஆகிவிடுவார்கள்'' என்று ருஜுதா எச்சரிக்கிறார்.

முக்கியமான விஷயம், வாழ்க்கை, வேலை, உடற்பயிற்சி எல்லாவற்றுக்கும் இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்திக் கொள்வதுதான். எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமானது உறக்கம். நவீன வாழ்க்கை முறை உங்கள் உடல்நிலையை பாதிக்க அனுமதிக்காதீர்கள். **********

# தாயக மக்களின் அவலம் மனதைப் பாதித்துள்ள நிலையில் செம்மொழி மாநாட்டில் இதயபூர்வமாகப் பங்குபற்ற முடியாது

**எமது நாட்டின் புகழ் பூத்த கவிஞர்களில் ஒருவரான கவிஞர் வி. கந்தவனம் இப்போது யாழ். வந்துள்ளார். தனது அனுபவங்கள், படைப்பாற்றல் என்பவற்றை இத்தருணத்தில் 'உதயன்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் அவர்.**



கேள்வி: கனடாவில் நீங்கள் வாழ்ந்த காலத்தில் மேற்கொண்ட கலை, இலக்கி யப் பணிகள் பற்றி சொல்லுங்கள்?

பதில்: 25க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளேன். இப்பொழுதும் அங்கே வெளிவருகின்ற வாராந்த பத்திரி கைகளான 'தமிழர் தகவல்', 'விளம் பரம்', 'தாய் வீடு', 'உதயன்' போன்ற பத்திரிகைகளில் எனது படைப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

'கீதவாணி' என்னும் வானொலியில் பல ஆண்டுகளாக வாரந்தோறும் கவி யரங்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

2007 ஆம், 2008 ஆம் ஆண்டுகளில் கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபன வானொலியில் அதன் அதிபர் இளையபாரதி, எனது வாழ்க்கை வர லாற்றை நேர்காணல் முறையில் ஒலிபரப்புச் செய்துள்ளார்.

அது தற்சமயம் 500 க்கும் மேலான பக்கங்களில் நூலாக வெளிவந்துள்ளது.

எனது நூல்கள் பலவற்றை சென்னை காந்தளகமும், கனடா இந்து சமயப் பேரவை யும் அவ்வப்போது வெளியிட்டு இருக்கின்றன.

கே: 60களில் குடாநாடு அளாவிய அளவில் கவியரங்கங்கள் மற்றும் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்களில் கலந்து கொண்டிருக்கிறீர்கள் கனடா விலும் தொடர்கிறீர்களா?

ப: ஆம், அவற்றுக்கும் குறை வில்லை. அங்கும் கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள், சொற்பொலிவுகளுக்கு அதுசார் ஆர்வலர்கள் அழைப்பார்கள். அவற்றில் எல்லாம் கலந்து கொள்வேன். மேலும் இலக்கியம், சமயம் சார் சொற் பொழிவுகள் செய்துள்ளேன்.

'திருத்தொண்டர் புராண' தொடர் சொற்பொலிவுகளை 11/2 வருடமாக அங்குள்ள நல்லூர்க் கந்தசாமி ஆலயத்தில் செய்துள்ளேன். அதனை ஒரு பெரும்பணியாகக் கருதலாம். அது போல் நானும் டாக்டர் சண்முகம் அவர் களும் வானொலியில் புராண படனமும் செய்துள்ளோம். இந்த வகை நிகழ்ச்சிகள் இங்கேயோ வேறெந்த நாட்டிலுமோ நடைபெற்றதாக அறியப்படவில்லை.

கே: தாய் மண், கனடா இவற்றில் உங்கள் வாழ்க்கைக்கு உந்து சக்தியாக அமைந்த இடம் எதுவாக இருக்கும்?

ப: அது தாய் மண்தான் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. 1980ஆம் ஆண்டு ஒரு தொழிலைப் பெற்று வெளிநாடு சென்ற நான் அந்தத் தொழில் ஒப்பந்த முடிவில் தாயகம் திரும்பவே திட்டமிட்டிருந்தேன். ஆனால் நான் வாழ்ந்த குரும்பசிட்டி மண்ணை படையினர் ஆக்கிரமித்து எனது வீட்டையும் தமது பாவனைக்கு எடுத்துக் கொண்டதை அறிந்து எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.

கே: அடுத்த வருடம் கோயம்புத் தூரில் நடக்கவுள்ள செம்மொழி மாநாட் டில் கலந்து கொள்ளும் நோக்கமுண்டா?

ப: இல்லை

தாயக மக்களின் அவலம், என்னை மிகவும் பாதித்ததால் இது போன்ற மாநாடுகளில் இதயபூர்வமாக பங்கு கொள்ள முடியாமல் இருக்கின்றது.

கே: கலை, இலக்கியத்துறையில் நீங்கள் கவிதை, சொற்பொழிவு, பட்டிமன்றங்கள் தவிர்ந்த புனைக்கதை, நாடகம் என்பவற்றில் ஈடுபட்டதுண்டா?

ப: உண்மையில் கவிதை பாடு வதற்கு முன்பாக புனைகதைகள் சில வற்றைப் படைத்துள்ளேன். 'சமூகம்' என்னும் தலைப்பில் ஒரு நாவலைக் கூட எழுதியுள்ளேன். அச்சில் வெளி யான முதல் நூல் 'ஒன்றரை ரூபாய்' என்னும் நெடுங்கதைதான்.

நாடகத்துறையில் சிறுவர் நாடகங்கள் பலவற்றை எழுதி, நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளேன். அதற்கான காலம் முன்பு ஆசிரியராக, உப அதிப ராக, அதிபராக கல்லூரிகளில் பணி யாற்றிய சமயம் வாய்த்தவைதான். வசா விளான் மத்திய மகா வித்தியாலயம் சார் பில் என்னால் எழுதி நெறிப்படுத் திய 'புத்திமான் பலவான்' என்னும் நாட கம் கல்வியமைச்சால் அகில இலங்கை மட்டத்தில் கல்லூரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் முதல் பரிசு பெற்றதை நினைவு கூறலாம். அத்துடன் வசாவிளான் மகாவித்தியாலயம் முதலில் நாடகக் கல்வியை ஒரு பாடமாக உயர்தர வகுப்புக்குக் கற்பித்து 1980 ஆம் ஆண்டு மாணவர் களைப் பரீட்சையில் தோற்றுவிக்கச் செய்ததும் குறிப்பிடக் கூடியது.

கே: ஈழத்துப் பிரபல கவிஞர்களில் ஒருவரான நீங்கள் ஏதாவது காவியம் பாடியுள்ளீர்களா?

ப: தற்காலம் காவியங்களுக்கு உரிய [illegible] தாழ்மையான அபிப்பிராயம். காலத்துக்கு ஏற்ற வகை யில் தாயக மண்ணில் வாழ்ந்த காலத்தில் குறுங்காவியங்கள் சில பாடியுள் ளேன். அவற்றில் 'கீரிமலையினிலே...' என்னும் குறுங் காவியம் இரண் டாம் பதிப்பும் கண்டுள்ளது.

கே: உங்க ளால் மறக்க முடி யாத நபர்கள் என யாரை நினைக் கிறீர்கள்?

ப: பட்டிமன்றங்களிலும் கவியரங்குகளிலும் ஈடுபட்டிருந்த என்னைச் சமயத்துறையில் ஈடுபடுத்திய துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை மறக்க முடியாது. தனது இறுதிக் காலத் தில் என்னைப் பற்றிய கட்டுரை கள் பலவற்றை எழுதிய ரசிகமணி கனக செந்திநாதன் அவர்களையும் என்னால் மறக்க முடியாது. என்னை எல்லோரும் கவிஞர் என்று அழைக்க வைத்த 'ஈழநாடு' முன்னாள் ஆசிரியர் எஸ்.எம்.கோபாலரத் தினம் (கோபு) அவர்களையும் மறக்க முடியாது.

கே:தாங்கள் சிவபூமி முதியோர் இல்லம் சென்றதாக அறிந்தோம். அது பற்றிக் கூறுங்கள்?

ப:எமது முதியவர்கள் அமைதியாகத் தமது பிற்காலங்களைப் போக்கக்கூடிய வகையில் பல விதமான வசதிகள் அவர்க ளுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. முக்கியமாகத் தனித்தனியான மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதாகும்.

சுற்றுப் புறங்கள் பூங்காவைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது மற்று மொரு சிறப்பம்சம். அவர்களுடன் உரை யாடிய பொழுது அவர்கள் மிகவும் மகிழ்ச்சி யுடன் இருப்பதை நன்றாக அறியமுடிந் தது. இறைவழி, திருமுறை ஓதுதல், இடைக்கிடை சுற்றுலா அழைத்துச் செல் லப்படுதல், கலை, கலாசார நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தல் போன்ற பொழுது போக்கு வரத்து வசதிகளையும் 'சிவபூமி' நிர்வாகத் தினர் வழங்கிவருகின்றனர். இதனால் அவர்களுக்கு அது ஒரு சொர்க்கபூமி. *

நேர்காணல்:
- தேவி பரமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - யாழ்ப்பாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## கணக்கீட்டுக் கல்வியும் வணிகமும் - I | 60-T-I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

* அகிலன் வணிகச் செயற்பாடு ஒன்றை நடாத்த திட்டமிட்டார். இச் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்கு சில துணைச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடிவுசெய்தார். மக்களின் தேவைகளையும்,விருப்பங்களையும் சந்தை ஆய்வு முலம் கண்டறிந்தார். 01 - 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

01. வணிகம் ஒன்றின் அடிப்படை அம்சம் எவை?
 1) பொருட்கள் சேவைகள். 2) தேவை, விருப்பம்.
 3) பணமும் வங்கியும். 4) முயற்சியும் துணிவும்.

02. துணைநிலைச் சேவைகளில் ஒன்றாக கருத முடியாதது எது?
 1) களஞ்சியப்படுத்தல். 2) தொடர்பாடல்.
 3) கணக்குபதிவு. 4) வங்கி.

03. தேவையையும் விருப்பத்தையும் பிரதிபலிக்கும் சரியான தொடர் எது?
 1) உணவும் - உடையும். 2) வீடும் பாதுகாப்பும்.
 3) பொருட்களும் - சேவைகளும். 4) உணவும் இட்டலியும்.

04. வர்த்தகத்திற்கான பொருத்தமான சமன்பாடு எது?
 1) வணிகம் + வியாபாரம். 2) வர்த்தகம் +வியாபாரம்.
 3) வியாபாரம் + துணைநிலைச்சேவைகள்.
 4) வணிகம் + துணைநிலைச்சேவைகள்.

05. வணிகத்தின் ஆரம்பக் கட்டம் எது?
 1) நேர் உற்பத்தி. 2) பண்டமாற்று வியாபாரம்.
 3) கைத்தொழில் புரட்சி. 4) பணப்பரிமாற்று.

06. வணிகத்தின் அகச்சூழல் காரணிகளில் ஒன்றாக கருதப்படுவது எது?
 1) சட்டம். 2) முகாமை.
 3) இயற்கை. 4) பொருளாதாரம்.

07. காப்புறுதித் தத்துவத்தில் ஒன்றாக கருப்படுவது எது?
 1) நட்ட ஈட்டுத் தத்துவம். 2) கணக்கீட்டு தத்துவம்.
 3) பாதுகாப்புத் தத்துவம். 4) கூட்டுறவுத் தத்துவம்.

08. ஆயுள்காப்புறுதிக்கு பொருத்தமற்ற தத்துவம் எது?
 1) மிக்குயர் நம்பிக்கை தத்துவம். 2) அண்மியகார்ணத் தத்துவம்.
 3) காப்புறுதி செய்தகு நலன் 4) பங்களிப்புத் தத்துவம்.

09. வியாபாரத்தின் அடிப்படை பிரிவு யாது?
 1) மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம்.
 2) உள்நாட்டு வியாபாரம் வெளிநாட்டு வியாபாரம்.
 3) பொருள்வியாபாரம், சேவை வியாபாரம்.
 4) பண்டமாற்று வியாபாரம், பணவியாபாரம்.

10. வணிகத்திட்டமிடலுக்கு பொருத்தமற்ற காரணி எது?
 1) இடத்தெரிவு. 2) நிதித்தேவை.
 3) சட்டப்பிண்ணனி 4) பொதியிடல்.

* கபிலன் என்பவர் சங்கர் என்பவருக்கு ரூபா 40,000 இற்கு பண்டங்களை விற்பனை செய்தார். கபிலன் நிறுவனத்தரல் 10% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன், சங்கரிடம் பணம் வசூழிக்கப்பட்ட போது 15% காசுக் கழிவினை வழங்கியது. 11 - 15 வரையான வினாக்களுக்கு விடை தருக.

11. விற்பனை கணக்கில் காட்டப்பட வேண்டிய தொகை யாது?
 1) ரூபா 30,400 2) ரூபா 36,000 3) ரூபா 40,000 4) ரூபா 34,000

12. கடன் விற்பனைக்கும் காசுப் பெறுவனவுக்குமாக சரியான மூல ஆவணத்தொடர் எது?
 1) விற்பனைப்பட்டியல், வரவுத்தாள். 2) விற்பனைபட்டியல், பற்றுச்சீட்டு.
 3) பற்றுச்சீட்டு, கைச்சாத்து.
 4) விற்பனைப்பட்டியல், செலவுத்தாள்.

13. கடன்பட்டோரிடம் பெற்ற காசு,காசுக் கழிவுக்கான முறையே சரியான தொகை எது?
 1) ரூபா 5,400, ரூபா 30,600 2) ரூபா 36,000, ரூபா 4,000
 3) ரூபா.30,600 ரூபா. 5,400 4) ரூபா 30,600, ரூபா 3,600

14. மேற்படி காசுக் கழிவுக்குரிய சரியான இரட்டை பதிவு எது?
 1) கடன்பட்டோன் கணக்கு வரவு ரூபா 5,400.
 கொடுத்த கழிவுக் கணக்கு செலவு ரூபா 5,400
 2) கடன்பட்டோன் கணக்கு வரவு ரூபா 5,400
 கொடுத்த கழிவுக் கணக்கு செலவு ரூபா 5,400
 3) கடன்பட்டோன் கணக்கு வரவு ரூபா 3,600
 கொடுத்த கழிவுக் கணக்கு செலவு ரூபா 3,600
 4) கொடுத்த கழிவுக் கணக்கு செலவு ரூபா 5,400
 கடன்பட்டோன் கணக்கு செலவு ரூபா 5,400

15. காசுக் கழிவு வழங்கப்படும் சரியான சந்தர்ப்பம் எது?
 1) முழுக்காசும் பெறப்டும் போது.
 2) அதிகளவு விற்பனையின் போது.
 3) ஒழுங்காக பணம் பெறப்படும் போது
 4) விரைவாகப் பணம் பெறப்பட்ட போது

* வங்கியில் நடைமுறை கணக்கை வைத்திருக்கும் திரு. பவான் என்பவரது 2009 மே மாதத்திற்கு தயாரிக்கப்பட்ட காசேட்டு வங்கி மீதியும் வங்கிக்கூற்று மீதியும் வேறுப்பட்டது. இதற்கான காரணங்களை தேடிய போது வங்கிக்கட்டணம் ரூபா 1,200 உம், காசோலை புத்தகக்கட்டணம் ரூபா 200 உம்,நேரடி வைப்பு ரூபா 4,000 உம் காசேட்டில் பதியப்படாதுள்ளதுடன், மே மாதம இறுதியில் உள்ள வாறான மாற்றப்படாத காசோலை,வசூலிக்கப்படாத காசோலைகளீ முறையே ரூபா 4,800, ரூபா 3,200 ஆகும். 16 - 20 வரையான வினாக்களுக்கு விடை தருக.

16. மே மாதம் காசேட்டு வங்கி மீதி ரூபா 42,500 எனின் திருத்திய காசேட்டு வங்கி மீதி யாது?
 1) ரூபா 45,100. 2) ரூபா 46,700
 3) ரூபா 48,500 4) ரூபா 45,100

17. மே மாத வங்கிக்கூற்றுப்படி வங்கி மீதி யாது?
 1) 43, 200 2) ரூபா 46,700 3) ரூபா 48,500 4) ரூபா 41,500

18. வங்கிக்சுற்றின் செலவுநிரலில் காட்டப்பட வேண்டி விடயம் யாது?
 1) வங்கிவரி. 2) நேரடி வைப்பு.
 3) வைப்புச்செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலை.
 4) காசோலைப் புத்தக கட்டணம்.

19. வங்கிக்கூற்றில் வரவிடப்பட்டு காசேட்டில் செலவிடப்படாத விடயம் எது?
 1) நிலையியல் கட்டளைக் கொடுப்பனவு.
 2) வசூலித்த வருமானம்.
 3) நேரடி வைப்பு. 4) வங்கி வசூலித்த வட்டி.

20. மேற்படி தவலறுகளில் எது கால்வேறுபாட்டு தவறாகும்?
 1) வங்கிக்கட்டணம் ரூபா 1,200.
 2) காசோலைப்புத்தக கட்டணம் ரூபா 200
 3) நேரடி வைப்பு ரூபா 4000
 4) வசூலிக்கப்படாத காசோலைகள் ரூபா 3,200.

* கணக்கீடானது சில தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டது என்பது ஐங்கரனது கருத்தாகும். எனினும் மதுசான் கணக்கீடு இரட்டைப்பதிவு விதிகளை அடிப்படையாக கொண்டது என வாதிட்டார். இருவரது கருத்துகளும் சரியானது என்பது கணக்கீட்டு வல்லுனர்களின் கருத்தாகும். 21 - 25 வரையான வினாக்களுக்கு விடை தருக.

21. நிறுவனம், நிறுவன உடமையாளரில் இருந்து வேறான ஒரரு பிரிவாக கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தும் தத்துவம்,
 1) பண அளவீட்டு தத்துவம். 2) முன்னெச்சரிக்கை தத்துவம்.
 3) அலகுசார் தத்துவம். 4) கால தத்துவம்.

22. சொத்து அதிகரித்தல், பொறுப்பு குறைதல் எனும் கணக்கீட்டு விதி முறையே எவ்வாறு அமையும்?
 1) வரவு, செலவு. 2) செலவு, செலவு.
 3) செலவு, வரவு. 4) வரவு, வரவு.

23. பின்வருவனவற்றில் இரட்டைப்பதிவு விதியாக கொள்ள முடியாதது?
 1) சொத்து அதிகரித்தல் வரவு பொறுப்பு அதிகரித்தல் செலவு.
 2) செலவு அதிகரித்தல் வரவு வருமானம் குறைதல் வரவு.
 3) மூலதனம் அதிகரித்தல் வரவு மூலதனம் குறைதல் செலவு.
 4) பொறுப்பு அதிகரித்தல் செலவு பொறுப்பு குறைதல் செலவு.

24. பின்வருவனவற்றில் சரியாக கணக்கீட்டுச் சமன்பாடு எது?
 1) சொத்து + பொறுப்பு = மூலதனம். 2) சொத்து + மூலதனம் = மூலதனம்.
 3) சொத்து - பொறுப்பு = மூலதனம். 4) வருமானம் - செலவு = மூலதனம்.

25. கணக்கீட்டு சமன்பாட்டிற்கு பொருத்தமற்ற கூற்று
 1) சொத்து அதிகரிக்கும் அதே அளவால் பொறுப்பு அதிகரித்தல்.
 2) சொத்து குறையும் அதே அளவால் பொறுப்பு குறைதல்.
 3) சொத்து அதிகரிக்கும் அதே அளவால் பொறுப்பு குறைதல்.
 4) சொத்து அதிகரிக்கும் அதே அளவால் பிறிதொரு சொத்து குறைதல்.

* இலாபநோக்கமற்ற முயற்சியில் ஈடுபடும் தியாகிகள் விளையாட்டுக்கழகத்தில் மாதாந்தம் ரூபா 50 சந்தாக்கட்டணமாக செலுத்தும் 30 அங்கத்தினர்கள் 01/01/2008இல் காணப்படுகின்றனர் . இத்தினத்தில் உள்ள சந்தா நிலுவை, முற்பணம் முறையே ரூபா 3,600, ரூபா 5,400 ஆகும். அத்துடன் அங்கத்தவர் ஒருவரிடம் நுளைவுக் கட்டணமாக ரூபா 100 அறவிடப்படும் 2008ஆம் ஆண்டில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர் தொகை 15 பேர். 31/12/2008 இல் உள்ள சந்தா நிலுவை, முற்பணம் முறையே ரூபா 2,400, ரூபா 3,000 ஆகும். 26- 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.

26. 2008 நிதியாண்டுக்குரிய வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா எவ்வளவு?
 1) ரூபா 2,250. 2) ரூபா 18,000 3) ரூபா 27,000 4) ரூபா 1,500

27. 2008 இல் காசாக பெறப்பட்ட சந்தா எவ்வளவ்?
 1) ரூபா 27,000 2) ரூபா 25,800 3) ரூபா 28,500 4) ரூபா 30,000

28. இவ்வாண்டில் பெறப்பட்ட நுழைவுக்கட்டணத்தில் 40% கழகத்தின் வருமானமாக கருதின் 2008 கழகத்தின் மொத்த வருமானம் யாது?
 1) ரூபா 27,600 2) ரூபா 600 3) ரூபா 26,400 4) ரூபா 1,500

29. இவ்வாண்டிற்கான மொத்த காசுப் பெறுவனவு யாது?
 1) ரூபா 27,800 2) ரூபா 27,300 3) ரூபா28,500 4) ரூபா26,700

30. இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை எவ்வாறு அழைப்பர்?
 1) மூலதனம். 2) இலாபம்.
 3) திரண்டநிதி. 4) செலவிடக்கூடிய வருமானம்

* ஆடை உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் ரங்கா 80,000 பெறுமதியான துணிகளை கொள்வனவு செய்து ரூபா 20,000 வடிவமைப்பாளர் கூலி செய்து தொழிற்சாலைக்கு 2,000 வாடகை செலுத்தியும் ரூபா 4,000 தெறிகளை கொள்வனவு செய்தும், தொழிற்சாலைக்கு ரூபா 1,500 மின்கட்டணம் செலுத்தியும், பொதியிடலுக்கு ரூபா 3,000 செலவிட்டும் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டார் இறுதி துணி கையிருப்பு ரூபா 18,000 ஆகும். 31 - 33 வரையான வினாக்களுக்கு விடை தருக.

31. இவரது முதற்கிரயம் எவ்வளவு?
 1) ரூபா 86000 2) ரூபா 104,000 3) ரூபா 82,000 4) ரூபா 89,500

32. மொத்த உற்பத்திக்கிரயம் யாது?
 1) ரூபா 85,000 2) ரூபா 86,500 3) ரூபா 89,500 4) ரூபா 88,000

33. உற்பத்தியல்லா மேந்தலை உற்பத்தி மேந்தலை முறையே எவ்வளவு?
 1) ரூபா 3500, ரூபா 3,000 2) ரூபா 7,500, ரூபா 3,000
 3) ரூபா 3000, ரூபா 4,500 4) ரூபா 3000, ரூபா 3,500

34. பின்வரும் கூற்றில் சரியான கூற்று எது?
 1) இறுதி இருப்புக்கும் விற்பனைக்கிரயத்திற்கும் நேர் கணியதொடர்பு காணப்படும்.
 2) இறுதி இருப்புக்கும் விற்பனைக்கிரயத்திற்கும் எதிர் கணியதொடர்பு காணப்படும்.
 3) ஆரம்ப இருப்புக்கும் விற்பனைக்கிரயத்திற்கும் எதிர் கணியதொடர்பு காணப்படும்.
 4) விற்பனைக்கிரயத்திற்கும் மொத்தலாபத்திற்கும் நேர் கணியதொடர்பு காணப்படும்.

35. காசோலைக்கு பாதுகாப்பை ஏற்படுத்தும் நடவடிக்கை எது?
 1) புறக்குறிப்பிடல். 2) குறுக்குகோடிடல்.
 3) இரகசிய குறியிடல். 4) கவரிடுதல்.

வளரும்......

ஆசிரியர்: S.திருக்குமாரன்,
யாழ்/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.18

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வுகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் வரணி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(50-207)

## தென்மராட்சிப் பாடசாலைகளில் 1750 இடம்பெயர்ந்த மாணவர்

யாழ்ப்பாணம்,நவ.18

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆயிரத்து 750 மாணவர்கள் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மாணவர்களுக்கான சீருடைகள் கற்றல் உபகரணங்கள், ஆகியவை வலயக் கல்வி அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 84ஆவது அவதாரதின விழா

யாழ்ப்பாணம், நவ.18

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 84ஆவது அவதார தின விழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அதிகாலை 4.45 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் என்பன நடைபெற்று காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

முற்பகல் 10.30 மணிக்கு பகவானின் போதனைகளை கோ.சத்தியன் நெறியாள்கை செய்து இசை வடிவில் வழங்கவுள்ளார்.

முற்பகல் 11.15 மணிக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகக்கிளை முகாமையாளர் ஆர்.சுந்தரேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

மாலை நிகழ்வுகளில் பிற்பகல் 2 மணிக்கு 'கலியுக அவதாரம்' இசையும் கதையும், 2.55 மணிக்கு 'பகவான் சாயியும் சுப்பம்மாவும்' நாடகம், 3.45 மணிக்கு பஜனை, 4.40 மணிக்கு திருவூஞ்சல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (50-204)

## தென்மராட்சியில் இன்றுமுதல் கணிதபாடச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக கணித பாட வழிகாட்டல் செயலமர்வுகள் இன்று புதன்கிழமை தொடக்கம் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் பொருத்தமான திகதிகளில் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளதால் கணித வினாத்தாள் கையேடுகளை (செயற்பாட்டுத் தொடர் 11.16வரை) வலயக்கல்வி அலுவலகத்தில் இன்று பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(1-207)

## மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு ஜப்பான் 25 கோடி டொலர் நிதியுதவி

கொழும்பு, நவ- 18

வவுனியா பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்றம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்த உலக ஸ்தாபனங்கள் மற்றும் ஜப்பான் அரசு மேலும் 25 கோடி டொலரை நிதியுதவியாக வழங்க முன்வந்துள்ளன.

குறிப்பிட்ட ஸ்தாபனங்களும் ஜப்பான் அரசும் இவ்வருட இறுதிக்குள் இந்தத் தொகையை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக வவுனியா அரச அதிபர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆறு மாத காலத்திற்குள் மீள் குடியேற்றம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஜப்பான் அரசுடன் உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இவ்வாறு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளன. (சி)

## மகாஜனவில் நாளை விசேட கருத்துரை

யாழ்ப்பாணம்,நவ.18

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்த சயனன் தலைமையில் நடைபெறவுள் ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிஷ்ண சாரதா சோவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மனோ சக்தியை வளர்ப்பது எப்படி என்ற தலைப்பிலும் தரம் 6 வகுப்பு மாணவர்களுக்கு 'சுவாமி விவேகானந்தர் சொன்ன கதைகள்' கதை சொல்லும் நேரம் என்னும் தொடரிலும் கருத் துரைகள் வழங்கப்படவுள்ளன. (50-7)

## அச்சுறுத்தலின் அளவுக்கு ஏற்ப பொன்சேகாவுக்கு பாதுகாப்பாம்

### ஜனாதிபதியின் செயலர் அவருக்கு அறிவிப்பு

கொழும்பு, நவ.18

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலின் அளவைக் கருத்திற்கொண்டு உரிய முறையில் அவருக்குப் பாதுகாப்பு வசதி வழங்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

படைச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான அனுமதியைக் கோரும் - நவம்பர் 12 ஆம் திகதியிடப்பட்ட - உங்களது கடிதத்தைஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதி பதி எனக்கு உத்தரவிட்டுள்ளார்.மேலும் தாமதமின்றி ஓய்வுபெற நீங்கள் விரும்பு வதைக் கருத்திற்கொண்டும், உங்கள் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் நான்கு ஆண்டுகள் பதவியில் நீங்கள் நீடித்தமையைக் குறிப்பிட்டுள்ளமையால், அதைக் கவனத்தில் கொண்டும் நீங்கள் உடனடியாக இலங்கை இராணுவத்திலிருந்து ஓய்வுபெறுகிறீர்கள் என்பதைத் தெரிவிக்குமாறும் ஜனாதிபதி என்னைக் கோரியுள்ளார்.

இதனடிப்படையில் உடனடியாக நீங் கள் முப்படைகளின் தலைமையதிகாரி என்ற பொறுப்பிலிருந்தும் இல்லாமல் போகி றீர்கள்.

இலங்கையின் மிக மூத்த அதிகாரி என்ற வகையில் உங்கள்மீது ஜனாதிபதியும், அரசும் வைத்திருந்த நம்பிக்கை குறைவடைந்துவிட்டது என நீங்களே உங்களது கடிதத்தில் தெரிவித்தமையைக் கவலையுடன் ஆராய்ந்த பின்னரே, இந்த முடிவிற்கு ஜனாதிபதி வர வேண்டி நேர்ந்தது.

உங்களிற்கு உள்ள அச்சுறுத்தலின் அளவைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்ப போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்பதை உங்களுக்கு அறிவிக்குமாறும் எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உங்களது கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்ட ஏனைய பல விடயங்கள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத் தும் கடிதங்கள் மேலும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## பாதுகாப்புக் குறைக்கப்பட்டமையை கடுமையாக ஆட்சேபிக்கின்றது ஐ.தே.க.

கொழும்பு, நவ.18

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாது காப்புக் குறைக்கப்பட்டமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அரசின் இச்செயற்பாட்டுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் எம்.பியுமான கயந்த கருணாதிலகவே இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகா இந்நாட்டுக்கு வரலாற்றில் மறக்கமுடியாத சேவையைச் செய்துள்ளார். பல யுத்த தந்திரோபாயங்களை வகுத்து அவர் பயங்கரவாதத்தைத் தோற்கடித்து இந்நாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

அடுத்துவரும் தளபதிக்கு நான் இந்த யுத்தத்தை விட்டுவைக்க மாட்டேன் என்று சரத் பொன்சேகா கூறி, அவ்வாறே செய்து முடித்தார். இன்று நாட்டு மக்கள் நிம்மதியாக - சுதந்திரமாக - வாழ்வதற்கு அவர் செய்த தியாகமே காரணம். அப்படிப்பட்ட வீரரைப் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் கடமை. பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டார் என்பதற்காக அவரது பாதுகாப்பைக் குறைப்பது அநியா யம்.

பாதுகாப்பு வழங்குவதற்குத் தகுதியுடைய அனைவருக்கும் பாதுகாப்பு வழங் கப்பட வேண்டும் என்பது எமது நிலைப் பாடு. இந்நிலையில் பொன்சேகாவிற்கான பாதுகாப்புக் குறைக்கப்பட்டமைக்கு எதிராக நாம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்போம்.- என்றார். (சி)

## மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டவர் முகாமில் கைது

கொழும்பு, நவ-18

1996 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் கட்டட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு உடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தற்போது செட்டிகுளம் அகதிமுகா மில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்- எனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொள்வதற்காக வெடிபொருள் நிரப்பிய லொறியை கொழும்பிற்கு கொண்டு வந்தார் என குற்றஞ்சாட்டப்பட்ட நிலை யில் அவருக்கு 200 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. செல்லத்தம்பி நவரட்ணம் என்ற இவர், செட்டிகுளம் பிரதேசத்தில் வைத்தே கைது செய்யப் பட் டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்ட யுத்தத்தின்போது வெள்ள முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இருந்து அரச கட்டுப்பாட்டில் உள்ள இடம்பெயர்ந்த முகாம்களில் சில காலம் தங்கியிருந்தார் எனப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

அவரது தேசிய அடையாள அட்டை முகவரியின்படி மருதநகர் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்ததை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)





இளவாலை சீந்திப்பந்தல் பகுதியில் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக் குடியேறியுள்ள மக்களின் காணிகளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.தயானந்த பண்டார ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறுவர் ஒருவர் பிரதிப் பொலிஸ்மா அதிபரை மாலையிட்டு வரவேற்பதையும், வட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.மகேஸ்பெரேரா, என்.சுபாஸ்கரசர்மா ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றுவதையும் முதல் மூன்று படங்களில் காணலாம். இளவாலை மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருட்திரு எம்.ஞானேந்திரன் - இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.ஜே.பி. விஜயரட்ண, பிரதிப்பொலிஸ்மா அதிபர் எல்.எம்.தயானந்த பண்டார ஆகியோர் உரையாற்றுவதையும் பொதுமக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: சரவணன்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



த.அஜந்தகுமாரின் இருநூல்களின் வெளியீட்டுவிழா நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் திருமண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.நூல்களைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியிட்டு வைக்க நூலாசிரியர் த.அஜந்தகுமாரிடமிருந்து நூலினை ஊற்று நிறுவனப் பணிப்பாளர் பொ.விக்னேஸ்வரன் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா தலைமையுரை நிகழ்த்துவதையும், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் நூலின் அறிமுக உரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியீட்டுரை நிகழ்த்துவதையும்அடுத்துள்ள மூன்று படங்களில் காணலாம். யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன், சமூகவியல்துறை விரிவுரையாளர் ந.மயூரரூபன் ஆகியோர் நூல்களுக்கான கருத்துரைகளை வழங் குவதை அடுத்துள்ள நான்கு படங்களில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருதொகுதியினரை இறுதிப் படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: ஹரிஸ்)*

## எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 18

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிப் போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான பிரிவு I போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும், பிரிவு II திறந்த போட்டி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன. (204)


### வீடு விற்பனைக்கு

ஆடிய பாதம் றோட்டில் பழஞ்சந்தையடி முருகன் வீதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு [ஆடிய பாதம் றோட்டில் இருந்து வீடு 50 மீற்றர் தூரம்] (91169) தொடர்பு : 0779865761

### விற்பனைக்கு

நகைக்கடைக்கு தேவையான வேம்பிலான கண்ணாடி மர அலுமாரிகள், மேசைகள், நில விரிப்புக்கள், சுழல் மின் விசிறிகள், இரும்புப் பெட்டிகள், தராசுகள், விளம்பரப் பிளாஸ்ரிக் போர்ட் என்பன விற்பனைக்கு உண்டு.

(91166) தொடர்பு : 0777111123

### மணமகள் தேவை

M.Sc.முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian P.R. உள்ள சைவசமயம் 29 வயது, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு, வைத்தியத் துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.

(90672) தொடர்பு : 0713163508

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்

(90711)


### பாராட்டி வாழ்த்துகிறோம்

புலமைப் பரிசில் பரீட்சை - 2009

| | |
|---|---|
| ஜெ.யதுகுலன் | - 155 |
| த. வைஷ்ணவன் | - 141 |
| தே.கரணி | - 123 [வவு/நலன்புரி நிலையம்] |
| த.கேதினி | - 113[வவு/நலன்புரி நிலையம்] |
| த.தயுஸ்ரன் | - 131 |
| வ.சாந்தகுமார் | - 131 |
| நி.நிவேதிகா | - 125 |
| கீ.டிலானி | - 112 |
| பு.நிவேதன் | - 110 |
| பு.ருக்மன் | - 102 |
| க.பகீரதன் | - 100 |

இவர்களது வெற்றிக்கு வழிகாட்டிய திரு.இ.ஜெயதாஸ் ஆசிரியரையும், ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் உளமாரப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/தந்தை செல்வா
தொடக்க நிலைப்பள்ளி.

(91174)

## தற்காலிக இணைப்பு

யாழ்ப்பாணம், நவ.18

தீவகவலயப் பாடசாலைகளில் 43 ஆசிரியர்களும், 6 கல்விசாரா ஊழியர்களும் புதிதாக இணைப்புப் பெற்றுள்ளதாக தீவகவலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் இருந்து மீளக்குடியேறிய இந்த அலுவலர்களுக்கு அவர்களது வீடுகளுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களின் நியமனங்கள்பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விரைவில் மாற்றி அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-204-207)

### நெஞ்சகலா நினைவலைகள்

பதின்நான்காம் ஆண்டு
எம் தந்தை ஓர் கோபுரம்

பத்தொன்பதாம் ஆண்டு
எம் அன்னை ஓர் ஆலயம்





அமரர்
வை:பரமசுந்தரம்
(சரவணை கிழக்கு)
தோற்றம்: 05.08.1932 மறைவு: 22.07.1995

திருமதி
தாட்சாயணி பரமசுந்தரம்
(சரவணை கிழக்கு)
தோற்றம்: 14.12.1942 மறைவு: 18.11.1990

அம்மையே...! அப்பா....! எங்கள்
அருந்தவத்து இறையே...நீங்கள்
கண்ணுளே மணியாய் எம்மைக்
காத்திட உழைத்தீர்...தேய்ந்தீர்...
பூவினிலே இன்று கண்டு
முழு மகிழ் வெய்தும் காலை-எங்கள்
கண்ணுளே உம்மை வைத்துக்
காத்திடப் பலன்தான் இன்றி
விண்ணுறும் தெய்வமாகி
விரைந்திட வாடுறோம் நாம்....
அய்யனே...! அம்மா....! நாங்கள்
அயர்ந்திடும் வேளையயில்-இந்த
மண்ணுறும் காலை மட்டும்
மறந்திடோம்...எண்ணி....எண்ணி...
கையது கூப்பி உள்ளம்
கனத்துமே விழிநீர்சிந்தி-எம்
தெய்வமே வணங்குகின்றோம்-எம்மைத்
தேற்றிநல் அமைதி கொள்வீர்...
ஆண்டுகள் ஓடிவிட்டாலும்-எம்
அன்புறும் விழி ஓயாது......
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



தங்களின் நினைவில் உள்ள
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 10, செட்டித்தெரு லேன்,
நல்லூர்.

(சி/562454)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10
★
04
★
1927



உதிர்வு
29
★
11
★
2008

அமரர்
## பொன்னம்பலம் முத்தையா

திதி : பூர்வபக்க துதியை -18.11.2009

ஆண்டு ஒன்று போனதையா ஆயினும்
எமது மனதில் உன் உருவம் நிலைத்து
நின்று வாட்டுதையா
எங்கள் உயிர் உள்ளவரை உனது பெயர்
நிலைக்குமையா
எம் நிலையை உயர்த்தி வைத்து நீ மறைந்தும்
எம்முள் ஆவியாய் நிற்கிறாயே!
உன் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

6, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(91179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியர் தினவிழா பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். ஜெயபாலன் தலைமையில் நடை பெற்றது.
நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர் செவாலியர் திருமதி எஸ்.இராமநர்தன், பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் உட்பட ஆசிரியர்கள் அனைவரும் மாலை அணிவிக்கப்பட்டு அணிவகுத்து நிற்பதை முதல் படத்திலும்
பிரதம விருந்தினர் செவாலியர் திருமதி எஸ்.இராமநாதன் ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## தேசிய மறை ஆசிரியர் பரீட்சை 21ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலையத்தினால் நடத்தப்படும் கத்தோலிக்க தேசிய மறை ஆசிரியர் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடை பெறவுள்ளது.

இந்தப் பரீட்சை யாழ்.மறைக்கல்வி நடு நிலையம், மானிப்பாய் புனித அன்னாள் றோ.க. பாடசாலை, நெடுந்தீவு றோ.க.மக ளிர் கல்லூரி ஆகிய நிலையங்களில் நடை பெறும்.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த வன்னி மாணவர்கள் எந்த மறைக் கோட் டத்தில் தங்கியிருக்கின்றார்களோ, அந்த மறைக் கோட்டங்களில் உள்ள பங்குத் தந்தையர்களுடன் தொடர்புகொண்டு பரீட் சையில் பங்குபற்றலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களுக்கு யாழ்.மறைக்கல்வி நடு நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-204)

## நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் அடிக்கடி மின்தடை

வண்ணை, நவ.18

நீர்வேலி, கோப்பாய்ப் பிரதேசங்களில் சட்ட விரோத மின்பாவனையால் அடிக்கடி மின்தடையேற்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நிலத்தின் கீழான பாதுகாப் பற்ற மின் இணைப்பால் தற்போது பெய்து வரும் மழையினால் மின்கசிவு ஏற்படு வதால் குறுஞ்சுற்றுக் காரணமாக மின்தடை யேற்படுவதுடன் சிறுவர்கள் ஆபத்தை எதிர் கொள்வதாக பொதுமக்கள் தரப்பில் சுட்டிக் காட்டப்படுகின்றது. (50-72)

## விடுவிக்கப்பட்ட மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,நவ.18

வவுனியா நலன்புரிநிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள்குடியேறி புங்குடுதீவுப் பகுதியிலுள்ள 5 பாடசாலை களில் இணைந்து கொண்ட407 மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த 23 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச்சபை மற்றும் லண்டன் புங்குடுதீவு அன்னை சி.பார்வதி அமைப்பகம் ஆகியவற்றால் வழங் கப்பட நிதியுதவியின் மூலம் வட இலங்கை சர்வோதயத்தின் ஏற்பாட்டில் கற்றல் உப கரணங்கள் வழங்கப்பட்டன.

(50-201)

## சண்டிலிப்பாய் பிரதேச விவசாய ஒருங்கிணைப்பு குழுக்களின் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச விவசாயக்குழு ஒருங்கிணைப் புக்குழு ஆகிய வற்றுக்கான கூட்டங்கள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத் தில் பிரதேச செயலர் தலைமையில் இடம் பெறவுள்ளன.

(50-201)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.18

அரசகரும மொழிகள் திணைக்களத் தின் மொழி ஆய்வு கூட கண்காணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம் ஒன்றில் சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில மொழி யில் ஆகக்குறைந்தது ஜி.சீ.ஈ உயர்தரத் தில் அல்லது அதற்கு நிகரான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

சர்வதேச மொழிகளில் தேர்ச்சியும் மொழி ஆய்வுகூட முகாமைத்துவத்தில் அனுபவ மும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். நிர்வாக விடயங்களில் ஐந்து வரு டங்களுக்கு மேலான அனுபவம் பெற்றி ருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 30 வயதுக்குக் குறை யாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவ ராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் ''அரச கரும மொழிகள் ஆணையாளர், அர சகரும மொழிகள் திணைக்களம், ''பாஷா மந்திரய'' 341/7, கோட்டே வீதி, இராஜ கிரிய'' என்னும் முகவரிக்கு பதிவுத் தபா லில் அனுப்பி வைக்க வேண்டும். மேல திக விவரங்களுக்கு 13.11.2009 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்வையி டலாம். (201)

* * *

யாழ்ப்பாணம், நவ.18

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தில் வெற்றிடமாகவுள்ள மின்நுட்பவிய லாளர் பதவிக்கு தகைமையுடைய ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறை யாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திக திக்கு முன்பதாக ''பரீட்சைகள் ஆணையா ளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத்திணைக் களம் பெலவத்தை, பத்திரமுல்லை'' என் னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 13.11.2009 ஆம் திகதிய வர்த்தமானிப் பத் திரிகையைப் பார்வையிடலாம்.

(50-201)

## வலி.கிழக்குப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கை மும்முரம்

கோப்பாய்.நவ.18

தொடர்ச்சியாக பெய்து வரும் பருவ மழையைத் தொடர்ந்து வலி.கிழக்குப் பிர தேசத்தில் விவசாய நடவடிக்கைகள் தீவிரம் பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள் ளது.

கடந்த காலங்களில் பல வருடங்களாக செய்கை பண்ணப்படாதிருந்த பல தரிசு நிலங்களும் பண்படுத்தப்பட்டு விவசாய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வெங்காயம், வாழை போன்ற பயிர்களே அதிகளவு நிலப்பரப்பில் புதிதாக செய்கை பண்ணப்படுவதற்காக நடுகை செய்கைபடுகின்றது.

தொடர்ந்தும் வாழை, வெங்காயம் போன்ற பயிர்களின் உற்பத்தி தென்னிலங்கைப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதியாவதால் இவற்றின் விலைகள் சீரானமட்டத்தில் தொடர்ந்து பேணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால் விவசாயிகள் பலரும் நன் மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது குடாநட்டுக் சந்தைகளில் வெங்காயம் கிலோ 100 ரூபாவாகவும், வாழைக் குலை இதரை இனம் கிலோவொன்று 40 ரூபா தொடக்கம் 50 ரூபா வரையும், கதலி இனம் 20 ரூபா தொடக்கம் 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப் பிடக்கத்தது. (50-72)

## வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறையில் இருக்கும் கைதிகள் தொடர்பாக அதிக அக்கறை செலுத்துங்கள்

### நீதியமைச்சரிடம் ஜயலத் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 18

தற்போது சிறைச்சாலைகளில் 600 இற்கும் அதிகமான கைதிகள் சிறைப்படுத் தப்பட்டுள்ளனர். அவர்களுள் பலருக்கு இன்னும் வழக்குதாக்கல் செய்யப்படவில்லை. போதிய ஆதாரங்கள் இருப்பின் ஏன் அவர் களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தாமல் வரு டக் கணக்கில் சிறைச்சாலைகளில் தடுத்து வைத்துள்ளனர். ஐ. தே. க.நாடாளுமன்ற உறுப் பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, நீதி மைச்சர் மிலிந்த மொறகொடவிடம் வினவினார்.

மேலும் இன்னும் பலருக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதும் அவர்களுக் கான பொலிஸ் அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாமல் இருக்கின்றன. இத னால் அவர்கள் விடுதலை செய்யப்பட முடியாத நிலையில் உள்ளனர். இதற்கான காரணங்களையும் பரிசீலனை செய்யுமாறு அமைச்சரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

நீதியமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச் சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலை யில் கடந்த வெள்ளிக்கிழமை மனிதாபிமான மற்ற முறை யில் தாக்கப்பட்ட சிறைக்கைதிகள் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாக பரிசீலனை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் புனரமைப்பு முகாம்களில் உள்ள சிறுபிள்ளைகளைப் பார்வையிடுவதற்கு சமயத் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்ப டுதல் வேண்டும் எனவும் அவர்கள் தத்தமது சமய ஒழுக்கங்களையும், மன அமைதியை யும் பெறுவது இன்றியமையாதது எனவும் அம் முகாம்களில் அங்கவீனமான பிள்ளைகள், அநாதைகளாக்கப்பட்ட பிள்ளைகள் போன் றோரும் இருக்கின்றனர் என்றும் இப்பிள்ளை களின் புனர்வாழ்வில் சமயத்தலைவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றால் நன்றாக இருக் கும் என்று டாக்டர் ஜயலத் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இக்கோரிக்கைகளை செவிமடுத்த அமைச்சர் அதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி கூறியுள்ளார். (50)

## சங்கீத, சித்திரபாட முகாம்கள் இன்றுமுதல்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப்பரீட்சை யில் சித்திரம் சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு தோற்றும் மாணவர்களுக்கு பாடமுகாம்கள் நடத்தப்படவுள்ளன.

நல்லூர், யாழ்ப்பாணம் கோட்டங்களில் இன்று புதன்கிழமை காலை 9மணி முதல் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் கோப் பாய்க்கோட்டத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கோப்பாய் கிறிஸ்த வக் கல்லூரியிலும் சித்திரப்பாட முகாம் இடம்பெறவுள்ளது.

நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டங்க ளில் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரியிலும் நாளை வியாழக்கிழமை காலை 9மணி முதல் புத் தூர் சோமஸ்கந்தக் கல்லூரியிலும் சங்கீத பாடமுகாம் இடம்பெறவுள்ளது. (1)

## பெருகிவரும் நடை பாதைக் கடைகளால் நகரப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி

வண்ணை.நவ.18

யாழ்.மத்தியபேருந்து நிலையத்தி லிருந்து பிரதான வைத்தியசாலை வரை யான நடைபாதையில் மீண்டும் நடை பாதைக்கடைகள் சிறிது சிறிதாகப் பெருகி வருவதைக் காணமுடிகிறது.

கடந்த காலங்களில் நடைபாதைகளில் வியாபாரிகள் கடைவிரிப்பு நடவடிக்கை மேற்கொண்டதால் வீதிகளில் வாகனப் போக்குவரத்தில் சிரமங்கள் தோன்றிய தாலும் விபத்துக்கள் அதிகரிக்கப்பட்டதா லும் நடைபாதைக்கடைகள் பொலிசாரால் மூடப்பட்டன.

இந்நிலையில் மீண்டும் நடை பாதைக் கடைகள் அதிகரிப்பதால் ஆஸ்பத்திரி மற் றும் பேருந்து நிலையத்திற்கு இடையே யான போக்குவரத்தின் போது சனநெருக்கடி ஏற் படுவதாகக் கூறப்படுகிறது. (04-160)

## இ.போ.ச.-தனியார் பஸ்கள் விபத்து

யாழ்ப்பாணம்.நவ.18

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக் கட்டுவன் நோக்கிச் சென்றுகொண்டி ருந்த 764 இலக்க இ.போ.ச.பேருந்தும் அள வெட்டியிலிருந்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் நோக்கிச் சென்று கொண் டிருந்த 768 இலக்கத் தனியார் பஸ்ஸும் காலை 7.20 மணியளவில் ஒன்றையொன்று முந்தும் போது கஸ்தூரியார் வீதிச் சந்தியில் விபத்துக்குள் ளாகின.

இச் சம்பவத்தில் பயணிகள் எவருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை எனத் தெரி யவருகின்றது. எனினும் இ.போ.ச. பேருந் துக்கு பலத்த சேதங்களும் தனியார் பஸ்ஸின் முன்பக்க மின்குமிழ்கள் உடைந்தும் சேதம் ஏற்பட்டன.

உடனடியாக அவ்விடத்திற்கு வந்த பொலி ஸார் விபத்தினால் ஏற்பட்ட வீதித் தடையை நீக்குவதற்காக வாகனங்களை அப்புறப் பத்தினர். (50-15)

## உரம் விநியோகம்

சண்டிலிப்பாய் கமநல சேவை நிலை யத்தினால் விவசாயிகளுக்கு யூரியா உரம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

பரப்பொன்றிற்கு 2 கிலோ வீதம் 7ரூபா வீதம் மானிய அடிப்படையில் உரம் வழங் கப்படுகின்றது.


இதேவேளை விவசாயிகளுக்கு ஏற் கனவே முதலாம் கட்ட அடிப்படை உரம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (09-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
20 - 07 - 1929

மறைவு
22 - 11 - 2006



அன்புடன் எம்மை வளர்த்து
அறிவினை எமக்கூட்டி
ஆற்றல்கள் ஆயிரம் ஊட்டி
காவல் தெய்வமாய் இருந்து - எம்மை
காத்து வளர்த்த எம் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் மூன்று என்ன
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் உம்மை நாம் என்றும்

அமரர்
## கந்தையா இராஜேந்திரன்
(வைரமுத்து மாமா)

திதி:- 18.11.2009

**இன்று (18.11.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

830, கே.கே.எஸ். வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

(ச562441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவீய ரீதியிலும் தேசிய ரீதியிலும் விருதுகளை அள்ளிக்குவித்த

# செலிங்கோ லை.:.ப்



வர்த்தக நாம தலைமைத்துவ விருது
உலக வர்த்தக நாம காங்கிரஸ் 2009




செலிங்கோ லை.:.ப் சந்தைப்படுத்தல் குழு விருதினை பெற்றுக்கொள்ளல்



நாட்டின் சிறந்த சேவை வர்த்தக நாமம் - வெண்கல விருது
ஸ்லிம் விசேட வர்த்தக நாமம் 2009



UNOPS தேசிய முதலீட்டு அபிவிருத்தி முகாமையாளரான திரு. ரொஹான் அவர்களிடமிருந்து செலிங்கோ லை.:.ப் AGM சந்தைப்படுத்தல் திரு. அவர்கள் விருதினை பெற்றுக்கொள்ளல்

## நம்பிக்கைக்கான கௌரவ விருது

உலக வர்த்தக நாம காங்கிரஸ் வழங்கும் வர்த்தக நாமத்திற்கான உலகளாவீய விருதுகள் வழங்கும் வைபவத்தில், செலிங்கோ லை.:.ப்பிற்கு "வர்த்தக நாம தலைமைத்துவ விருது" (Overall Brand Leadership Award) வழங்கப்பட்டு உலகளாவீய ரீதியில் கௌரவிக்கப்பட்டது. இது 60ற்கும் மேற்பட்ட உலக நாடுகளிலுள்ள வெற்றிகரமான வர்த்தக நாமங்களுடன் போட்டியிட்டே இவ்விருதினை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்லிம் விசேட வர்த்தக நாமம் 2009 (SLIM Brand Excellence 2009) விருது வழங்கும் வைபவத்திலும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தால் "நாட்டின் சிறந்த சேவை வர்த்தக நாமம்" என்ற வெண்கல விருது இத்துறையிலேயே செலிங்கோ லை.:.ப்பிற்கு மட்டுமே வழங்கப்பட்டது.

உலகளாவீய ரீதியில் ஒரு அங்கீகாரத்தை நாம் பெறுவதற்கு உதவிய எமது காப்புறுதிதாரர்களுக்கு இதன் மூலம் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## செலிங்கோ லை.:.ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி

134, காலி வீதி, கொழும்பு 3. www.ceylincolife.com



செலிங்கோ லை.:.ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்- 2010

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற் றிடமிருந்து 2010ஆம் ஆண்டுக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து ஒவ்வொரு இலக்கத்துக்குமான வழங்கல்கள்/ சேவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ரூபா 100/= ஐ எமது அலுவலகத்தில் அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற பெயரில் இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் உள்ள நடைமுறைக்கணக்கு இலக்கம் 7040260இற்குச் செலுத்தி வங்கிப் பற்றுச்சிட்டை (Credit slip) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "வழங் கல்கள்/சேவைகள் பதிவுசெய்தல் - 2010' எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.12.2009ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

தொகுதிகள்
தொகுதி "A" - பொருள்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்)
தொகுதி "C" - சேவைகள்
தொகுதி "D" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல. | பொருள்கள் விவரம் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுது பொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A-02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/ உருக்கு) |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், றோணியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் எனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A-05 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A-06 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள் |
| A-07 | சகல விதமான அலுமினிய வீட்டுப் பாவனைப் பொருள்கள் |
| A-08 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் |
| A-09 | கட்டட, இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள் மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A-10 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்மோட்டர்கள், மின்சார பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும் |
| A-11 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A-12 | ஊத்தைச்சோடா, அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை |
| A-13 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் டயர், ரியூப் மற்றும் பற்றறிகள் |
| A-14 | நீர்க்குழாய்ப் பைப்புகள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A-15 | தோல் உற்பத்திப் பொருள்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள் |
| A-16 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A-17 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் |
| A-18 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A-19 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் |

| தொகுதி இல. | பொருள்களின் விவரம் (மருத்துவம்) |
|---|---|
| B-01 | Dressings |
| B-02 | Surgical Consumables |
| B-03 | Surgical Instruments |
| B-04 | Surgical Equipments |
| B-05 | Dental Consumables |

| தொகுதி இல. | சேவைகள் விவரம் |
|---|---|
| C-01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C-02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப் பெட்டி, றோணியோ இயந்திரம், கணனியும் அதனோடிணைந்த உபகரணங்களும், ஏனையவையும்) |
| C-03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் (Rewinding) |
| C-04 | பதிப்பக வேலை (Printing) - சகலவித படிவங்கள், ஏனையவை |
| C-05 | வைத்தியசாலை உபகரணங்கள் (சத்திரசிகிச்சை உபகரணம், எக்ஸ்ரே இயந்திரம், ஏனைய வைத்திய உபகரணங்கள்) திருத்தம் செய்தல் |
| C-06 | சகலவிதமான வைத்தியசாலைப் பொறித்தொகுதிகள் திருத்தம், பராமரிப்பு, சேவிஸ் செய்தல் மற்றும் ஏனையவை |
| C-07 | வைத்தியசாலைக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு இயந்திரத் திருத்தமும் பராமரிப்பும், கழிவுநீர்ப் பைப் அடைப்பு நீக்கி திருத்தம் செய்தல் |
| C-08 | வைத்தியசாலை அலுவலர்களுக்குப் பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குதல் |
| C-09 | கட்டடத் திருத்த வேலை |

| தொகுதி இல. | சேவைகள் விவரம் (வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்) |
|---|---|
| D-01 | சகல விதமான வாகனத் திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பனவற்றுக்கு குஷன் வேலை |
| D-02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு (Service) |

நிபந்தனைகள்:
01. வழங்கல்கள்/ சேவைகள் 2010 ஆண்டுக்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
03. பணிப்பாளர் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
05. மேலதிக விவரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 222 2261 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன், பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2010 போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

01. நிறுவனத்தின் பெயர்: 02. நிறுவனத்தின் முகவரி:
03. தொலைபேசி இலக்கம்: 04. தொலைநகல் இலக்கம்:
05. வியாபாரப் பதிவு இலக்கம்: 06. வியாபாரத்தின் தன்மை:

| தொகுதி இலக்கம் | வழங்கல் /சேவை விவரம் |
|---|---|
| | |

07. வற் பதிவு இலக்கம்:
08. மின்னஞ்சல் முகவரி:

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள் / சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன்/ உறுதியளிக்கின்றோம். ரூபா 100 இற்குரிய வங்கி வைப்புப் பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்துள்ளேன் / இணைத்துள்ளோம்.

விண்ணப்பதாரியின் ஒப்பம்:......................
விண்ணப்பதாரியின் பெயர்: ...................... (தி/562449) திகதி:..............


விநியோகஸ்தர்கள் தேவை

சம்சுங் மொபைல் போன்கள் மற்றும் புரோலிங்க் கம்யூட்டர் உதிரிப்பாகங்கள், துணை பாகங்களை யாழ்ப்பாணத்தில் விநியோ, கிக்க விநியோகஸ்தர்கள் தேவை.

அழைக்க: 071 7803783
071 8397758

SAMSUNG mob!le PROLiNK™


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கந்தையா வைரவிப்பிள்ளை

பிறப்பு 24*08*1924
இறப்பு 20*10*2009

கடந்த 20.10.2009 அன்று இயற்கை எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (19.11.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புற்றளை. (சி/562447) ச.ஜெயராசா குடும்பம்

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்)



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கனடாவில் வசித்தவருமாகிய நாகலிங்கம் இரத்தினசிங்கம் 16.11.2009 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், சிறாம்பியடியைச் சேர்ந்தவர்களான காலஞ்சென்ற இராசதுரை - நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும், வைத்தியகலாநிதி ரஞ்சித்குமார் (கனடா), சதீஸ்குமார் (பொறியியலாளர், கனடா), சோபனா (கனடா), தர்சனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷா (கனடா), ஜெனனி (கனடா), சுவேந்திரகுமார் (கனடா), சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷோரியின் அன்புப் பேரனும், புத்தூரைச் சேர்ந்த அன்னம்மா, இராசமணி, செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் இல்லத்தில் துக்கம் கொண்டாடப்படுகிறது.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (91171)

தகவல்:
சகோதரிகளும்,
குடும்பத்தினரும்.

### அப்புத்துரை குமாரசாமி



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை குமாரசாமி (14.11.2009) சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - இலச்சுமி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பகவதி தம்பதியினரின் மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மினி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லத்துரை, நிதர்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும், சதுர்ஜன், சகீரா, தரணிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், தவமலர், காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் தங்கமணி, இங்கித மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரந்தாமன், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் கனகசிங்கம், உதயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.11.2009) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குலம் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (91159)

தகவல்:
கு.பிரதீபன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பரிசில் தினம் அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர், பிரமுகர்கள் மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வரப்படுவதையும், பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமை உரையாற்றுவதையும் முதல் இரு படங்களிலும், மாணவர் ஒருவருக்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பரிசில் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (50-72)

# மாணவர்களுக்குத் தரமான கல்வியைப் புகட்ட சிறந்த ஆசிரியர்கள் உருவாக்கப்பட வேண்டும்

## பிரதிக் கல்வி அமைச்சர் உரை

யாழ்ப்பாணம், நவ. 18

மாணவர்களுக்குத் தரமான கல்வியைப் புகட்ட சிறந்த ஆசிரியர்கள் உருவாக்கப் பட வேண்டும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வியியற்கல்லூரிகள் என்பன அமைக்கப் பட்டு, இலங்கையில் கல்விப் போதனைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இன்று கல்வியிலே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தம்.

வட்டு. மத்திய கல்லூரிக்கு அவர் அண்மையில் விஜயம் செய்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் உரையாற்றுகையில் :-

யாழ். மாவட்டத்தில் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள் ஆகியவற்றால் மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைந்திருந்தது.

ஒரு காலத்தில் இலங்கையிலேயே கல்வியில் சிறந்த மாவட்டமாக யாழ். மாவட்டம் மிளிர்ந்துள்ளது. இந்த நிலை மீண்டும் வர வேண்டும்.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களுக்குள் வாழும் மாணவர்களுக்கு பாடவேலைத் திட்டத்தை அமுல் செய்யுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

கல்வி அமைச்சரின் ஆலோசனையைப் பெற்று 75 ஆயிரம் மாணவர்களுக்கு பல கோடி ரூபா செலவிடப்பட்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜீ. சி. ஈ சாதாரண தரப் பரீட்சை ஆகியவற்றை நடத்துவதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெறு கின்றன.

இலங்கையில் 2 லட்சத்து 16 ஆயிரம் ஆசிரியர்கள் இலவசக் கல்வியைப் புகட்டுகின்றார்கள். இந்த இலவசக்கல்விப் போதனை யாழ். மாவட்டத்தைச் சீரிய முறையில் அடைய வேண்டும் என்பதற்காகப் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான 12 லட்சம் இலவசப் பாடப் புத்தகங்களில் 10 இலட்சம் வரையான பாடப்புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதே போல் தேவையான அளவு சீருடைத்துணிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த சேவைகள் கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக ஒழுங்காகச் சென்று சேரவில்லை. கல்வி அதிகாரிகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றபோது கல்வியை அபிவிருத்தி அடையச் செய்யலாம் - என்றார். (04-204-29)

# உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணத்திலேயே கடவுச்சீட்டு

## 'பீ.ஓ.சி. டிரவல்ஸ்' அதிகாரிகள் தெரிவிப்பு

நல்லூர், நவ.18

உரிய ஆவணங்கள் கையளிக்கப் படும் பட்சத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி கடவுச் சீட்டு பெற்றுக் கொடுக்கக் கூடியதாக 'பி.ஓ.சி. டிரவல்ஸ்' தனியார் நிறுவனம் ஒழுங்குகளை மேற்கொள்ளும் என மேற்படி நிறுவனத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டமை வருமாறு:-

வணிகர் கழகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரி விக்கப்பட்டது.

ஒரு நாளில் கடவுச்சீட்டு எடுப்பதற்கான உரிய ஆவணங்கள் கையளிக்கப் பட்டால் ஐந்து வேலை நாள்களில் விண்ணப்பிப்பவருக்குரிய கடவுச்சீட்டு வழங்கப்படும் அதேவேளை, 60 வயதிற்குக் குறைவானவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். யாழ்ப்பாணச் சூழ்நிலை காரணமாக உரியவர்கள் 'பாஸ்போட்' அலுவலகத்திற்கு நேரடியாகச் செல்ல வேண்டும் எனக் கேட் கப்பட்டால் அது குறித்து விண்ணப்பிப்பவருக்கு அறிவிக்கப்படுவதுடன் அவர் கொழும்புக்குச் சென்று தமக்குரிய கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளத் தேவையான உதவிகளையும் நிறுவனம் வழங்கும். கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது தொழில் குறித்த விவரங்களை உரிய திணைக்களம் அல்லது நிறுவனங்களின் உறுதிப் படுத்தலுடன் சேர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விமான நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக பயணச்சீட்டுக்களை (ரிக்கெட்) நிறுவனத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தியா, தாய்லாந்து (பாங்கொக்), மலேசியா ஆகிய நாடுகளுக்கான விசா ஒழுங்கமைப்பும் பொதுமக்கள்'பி.ஓ.சி. டிரவல்ஸ்' நிறுவனத்தின் மூலம் ஒழுங்கு படுத்த முடியும்.ஏனைய நாடுகளுக்கான விசா ஒழுங்குகள் குறித்த அனுசரணைகள், ஆலோசனைகளையும் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான விவரங்களை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கட்டடத்தில் உள்ள நிறுவனத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (04-111)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வண்ணார்பண்ணைப் பகுதியில் தீவிரம்

நல்லூர்,நவ.18

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவில் பகுதியில் இருவர்டெங்கு நோய்க்கு உள்ளாகியமை அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் டெங்கு நோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பொதுமக்களிடம் இப் பகுதியில் காணப்படும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து விவரமாகக் கேட்ட யாழ். நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பொதுமக்களின் முறையீடுகள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு மாநகர சுகாதாரப்பகுதியினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மாநகரசபையின் பிரதம சுகாதாரபரிசோதகர் கே.ஏ.ஜிவநாதன் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறும் குறிப்பிட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை உடனடியாகவே ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒரு வாரத்துக்கு இப்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் கடந்த திங்கட்கிழமை முதல் இந்தப்பகுதியில் இதற்கான செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் யாழ். நகர முதல்வர் தெரிவித்தார்.

பிரதம சுகாதார பரிசோதகர் ஜீவநாதன் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உதவியாளர்கள், பொதுமக்கள், மாநகரசபையின் உறுப்பினர்கள் ஆகியோர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (04-111)

## உரம் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.18

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு 2009-2010 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்காக இரண்டாம்கட்ட உரம் விநியோகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-201)

# யாழ்ப்பாணத்தில் பெற்றோல் விநியோகம் இன்று முதல் வழமைக்குத் திரும்பும்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி

யாழ்ப்பாணம்.நவ.18

யாழ்.குடாநாட்டில் பெற்றோலுக்கு நிலவி வந்த தட்டுப்பாடு இன்றுமுதல் ஓரளவு நீங்கிவிடும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்கள் தமது அன்றாட தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தேவையான அளவு பெற்றோலை குடாநாட்டின் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் இன்றுமுதல் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக யாழ்.நகரப் பகுதியில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு அதிகளவில் காணப்படுவதால் நகரை அண்டிய சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் இன்று பெற்றோல் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

எனவே மக்கள் தேவையற்ற வதந்திகளை நம்பி பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றினை முண்டியடித்துக் கொண்டு அளவுக்கு அதிகமாகக் கொள்வனவு செய்ய வேண்டியதில்லை என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இன்று ஒரே சமயத்தில் சகல எரி பொருள் விற்பனை நிலையங்களுக்கும் எரிபொருளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளதால் அதற்கான தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் அனேகமான எரிபொருள் விற்பனை நிலையங்களில் மக்களுக்குத் தேவைக்கேற்ப மண்ணெண்ணெய் விநியோகிக்கப் பட்டு வருவதால் அதற்கான தட்டுப்பாடு நேற்று முதல் ஓரளவு நீங்கியுள்ளது.

அதேசமயம் அரச வாகனங்களுக்குப் போதியளவு எரிபொருள் விநியோகம் நேற்றுவரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கிடையே தரைப்பாதையூடாக கனரகபவுசர் வாகனங்கள் மூலம் பெற்றோல், மண்ணெண்ணெய் போன்றவை இன்னும் எடுத்து வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (14-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### நிவாரண விநியோகம்

நவாலி, நவ. 18

மானிப்பாய் ப.நோ.கூ சங்கக் கிளைகளில் இடம்பெயர்ந்தவர்களுக்கான நலிவுற்றோர் நிவாரணம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (04-100)

### தங்க மோதிரத்தை உரியவரிடம் சேர்ப்பித்த வியாபாரி

கோப்பாய், நவ.18

நீர்வேலி வாழைக்குலைச் சந்தையில் விவசாயி ஒருவரால் தவறவிடப்பட்ட ஒரு பவுண் எடையுள்ள தங்க மோதிரத்தை உரியவரிடம் சேர்ப்பித்த வியாபாரியின் நற்செயலைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

நீர்வேலிச் சந்தையில் வாழைக்குலை வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் எஸ்.அப்புத்துரை என்பவரே இதனை மேற்கொண்டவராவர். விவசாயி சந்தையில் கடந்த வாரம் வாழைக்குலையை சந்தைப்படுத்துவ தற்காக சைக்கிளிலிருந்து இறக்கும் போது மோதிரம் தவறவிடப்பட்டதாகவும், தவறவிட்டவர் பலருக்கும் தெரிவித்தபோது கண்டெடுத்த வியாபாரி உடனடியாக உரியவரிடம் சேர்ப்பித்ததாகவும் கூறப்படுகிறது. (50-72)

# பாஷையூர் சந்தைக் கட்டடத்தைப் புனரமைக்க உடன் நடவடிக்கை

## யாழ்.மாநகர முதல்வர் தகவல்

நல்லூர், நவ.18

யாழ்.பாஷையூர் சந்தைக் கட்டடத் தொகுதி சேதமடைந்துள்ளதால் அதனை உடன் திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் போது இக் கட்டடத்தின் கூரை மற்றும் தளப் பகுதிகள் சேதமடைந்துள்ளன.

பாஷையூர் சந்தைப் பகுதிக்கான வீதிகள் மீண்டும் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளதால் [illegible] பகுதியில் உள்ள அணைக்கட்டு புனரமைக்கப்பட வேண்டும் எனவும் பாஷையூர் கடற்றொழி லாளர் சங்கம் மேயரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து உதவி மேயர் இளங்கோ (றீகன்) தலைமையில் குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கட்டடம் திருத்தியமைக்கப்பட்டு சந்தைக் கழிவுகளை உடன் அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சேதமடைந்த வாய்க்கால்களைப் புனரமைக்க யூனமஸ் அமைப்பு முன்வந்துள்ளதாகவும் யாழ். மேயர் யோகேஸ்வரி தெரிவித்தார். (04-111-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்.இந்துக் கல்லூரி சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 'கனிவு' இதழ்-I வெளியீட்டு விழாவும் கடந்த திங்கட்கிழமை குமாரசாமி மண்டபத்தில், மாணவன் க.உஷாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளை அங்கத்தவர் செவ்வேள், யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.மனோரஞ்சன் ஆகியோர் மங்களவிளக் கேற்றுவதை முதலிரண்டு படங்களிலும், விருந்தினர்கள் மேடையில் நிற்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

'கனிவு' இதழினை பாடசாலையின் அதிபர் வீ.கணேசராஜா மற்றும் பிரதம விருந்தினர் ஆகியோர் வெளியிட ஈ.எஸ்.பி. நாகரத்தினம் நிறுவனத்தின் சார்பில் முகாமையாளர் குஞ்சிதபாதம் பெற்றுக் கொள்வதை அடுத்துள்ள படத்திலும், சிறுவர் செயற்பாட்டுக் கழகம் நடத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவரொருவருவக்கு 'பிசி பரடைஸ்' நிறுவன முகாமையாளர் க.சசீந்திரன் பரிசில் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: நந்தன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 ★ 04 ★ 1937

மறைவு
21 ★ 11 ★ 2008

**அமரர் சபாபதி கந்தசாமி**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
முன்னாள் தலைவர், மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)
திதி: 18.11.2009, வளர்பிறை துதியை

அறிவாலும் ஆற்றலாலும் மாணவர் மனதில் தடம் பதித்தாய்
பண்பாலும் பணிவாலும் மக்கள் சேவையில் முதல்வனானாய்
தொண்டாலும் துறவாலும் தூயோனெனப் பேர் பெற்றாய்
பாசத்தாலும் நேசத்தாலும் எங்கள் குடும்பத்தின் கோயிலானாய்
ஆண்டொன்றல்ல ஆயிரம்தான் சென்றாலும் மறக்குமோ நெஞ்சம்?

கலைச்சோலை,
7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.

(91167)

**குடும்பத்தினர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**ஐயாத்துரை பூபாலசிங்கம்**

தோற்றம்: 11.09.1931
மறைவு: 02.12.2005

ஆண்டுகள் நான்கு
சென்றால் என்ன?
ஆண்டுகள் ஆயிரம்
வந்தால் என்ன?
உங்கள் பாசம் என்றும்
எம் நினைவில்
நிலைத்து இருக்கும்.

இல.11, கலட்டி அம்மன் றோட்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(91100)

## உதவிப் பணம் பெறுவோர் கவனத்துக்கு

நவாலி, நவ.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் என்பனவற்றுக்கான உதவிப் பணம் பெறுபவர்கள் இம்மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தை உடன் பெறுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வீ.அருந்தவராசா கேட்டுள்ளார். (50-100)

## காவலரண் அகற்றப்பட்டது

வண்ணை, நவ. 18

யாழ். காங்கேசன்துறை வீதியில் இந்துக் கல்லூரி முன்பாக கடந்த சில வருடங்களாக ஒரு வீட்டில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் இல்லாமல் 2006ஆம் ஆண்டளவில் யாழ். இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட தாக்குதல் சம்பவங்களை அடுத்தே மேற்படி காவலரண் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (50-160)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமலர் தணிகாசலபதி



அளவெட்டி, மாரிசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமலர் தணிகாசலபதி நேற்று (17.11.2009) செவ்வாய்க் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தணிகாசலபதியின் (முன்னாள் வர்த்தக முகாமையாளர், கட்டைவேலி- நெல்லியடி, ப.நோ.கூ. சங்கம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாரிசிட்டி வேலாயுதம்- இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற நடராசாவின் அன்புச் சகோதரியும் சாரங்கன், பிரபாகரன், றஜிதா, முகுந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.11.2009) புதன் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுமுகபதி,
டச்சுறோட்,
அளவெட்டி.

(91168)

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16 . 07 . 1938

மறைவு
18 . 11 . 1984

**அமரர் அ.க.சிவசுப்பிரமணியம் (சிவம்)**

(உரிமையாளர், அம்புலி போட்டோ, நல்லூர்)
திதி: கார்த்திகை அபரபக்க தசமி (11.12.2009)

ஆண்டுகள் இருபத்தைந்துஆனதப்பா!
ஆனாலும் மறக்கவில்லை உங்களை
உங்கள் உயிருக்குள் எம்மை வளர்த்து
எம்மைக் கதறவிட்டுச் சென்றதேனோ அப்பா!
பாசக்கிளியாய் எம்மை வளர்த்த உங்களை
பாதிவழியிலே பிரித்துச் சென்றானே காலன் அப்பா!
ஆண்டுகள் பல சென்றோடி மறைந்தாலும்
அலைகடலில் துடுப்பிழந்து தவிக்கும் படகாய்
உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி வாழ்கின்றோம் அப்பா!

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"அம்புலி போட்டோ",
410, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (91086)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 05 1932

மறைவு
29 11 2008

**அமரர் மயில்வாகனம் இராமச்சந்திரன்**

**(பப்பா)**

திதி: துதியை

**உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் உங்கள் நினைவுடன்
பிரார்த்திக்கின்றோம்.**

சுலக்சன்,
பாரதி வீதி,
[illegible]. (91085)

**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் – யாழ்ப்பாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## கணிதம் - I (புதிய பாடத்திட்டம்) 32-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.


### பகுதி - A

01. ஒரு பென்சிலின் விலை ரூபா 5.75 எனின், 5 பென்சில்களின் விலை யாது?

02. 3.75 லீற்றரை மில்லி லீற்றரில் தருக.

03. $x - 5 = 4$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.


04. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கு ஏற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.




05. (-33) + 15

06. 10% ஐ தசம எண்ணாகத் தருக.

07. உருவில் AB, PQ என்னும் நேர்கோடுகள் ஒன்றை ஒன்று O இல் இடை வெட்டுகின்றன. $P\hat{O}C = 70^0$ எனின், x இன் பெறுமானம் யாது?




08. $3^2 \times 27$ என்பதை ஒருவலுவாகக் காட்டுக.


09. $n(P) = y - 3$ $n(Q) = 5$ ஆகும். P, Q என்பன சமவலுத் தொடைகள் ஆயின், y ஐக் காண்க.

10. $\Sigma = \{2, 4, 6, 8\}$, $A^1 = \{4, 7, 8\}$ எனின், n(A) ஐக் காண்க.

11. ஒரு பேனாவின் விலை ரூபா 8 ஆக இருந்தது ரூபா 10 ஆக அதிகரித்தது எனின், அதிகரித்த சதவீதம் யாது?

12. $5(x - 3) + 2y(3 - x)$ காரணிப்படுத்துக.

13.





உருவில் தரப்பட்டுள்ள PQR, QST எனும் முக்கோணிகள் ஒருங்கிசையுமா? ஒருங்கிசையுமாயின் நிபந்தனையைக் கூறுக.

14. 5, 15 என்னும் எண்களுக்கிடையில் 3 கூட்டல் இடைகளைக் காண்க.

15. $40kmh^{-1}$ என்னும் வேகத்தில் செல்லும் வாகனம் 100m ஐக் கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

16. $P = (y - 5)^2 - 9^2$ எனும் சமன்பாட்டில் y ஐ எழுவாயாக மாற்றுக.


17. ஆள்கூற்றுத்தளத்தில் காட்டப்பட்டுள்ள நேர்கோட்டின்
 1) படித்திறன் யாது?
 2) சமன்பாட்டை எழுதுக.




18. $10101_{இரண்டு}$ என்ற எண்ணை அடி நான்கு எண்ணாகத் தருக.

19. சுருக்குக. $\frac{2y}{y-1} \div \frac{y}{y^2 - 1}$

20. உருவில் உள்ள தரவுகளின்படி நிழற்றிய பகுதியின் சுற்றளவைக் காண்க.





21. தண்டு இலை வரைபில் தரப்பட்டுள்ள ஈட்டுக்களின்
 1) ஆகாரம்?
 2) இடையம் என்பவற்றைக் காண்க.


| தண்டு | இலை |
|---|---|
| 3 | 7 8 |
| 4 | 0 2 4 8 |
| 5 | 0 1 2 4 6 7 |
| 6 | 1 1 3 4 7 |
| 7 | 3 5 |

22. lg2 = 0.3 எனின், lg8 ஐக் காண்க.


23. 1 : 2500 என்னும் அளவிடைக்கு ஏற்ப வரையப்பட்ட செவ்வகக் காணி ஒன்றின் அளவிடைப்படம் அருகில் தரப்பட்டுள்ளது. அக்காணியின் நீளம், அகலம் என்பவற்றை m இல் தருக.




24. இணைகரம் PQRS இல் உள்ள தரவுகளின்படி x ஐக் காண்க.




25. O வட்டத்தின் மையம் PR வட்டத்தின் விட்டம் $R\hat{Q}S = 32^0$, $S\hat{R}T = 72^0$, QRT ஒரு நேர்கோடு எனின்,
 1) $Q\hat{P}R$
 2) $P\hat{S}Q$ என்பவற்றைக் காண்க.





26. X : Y = 1 : 2, Y : Z = 2 : 1 எனின், X : Y : Z ஐக் காண்க.


27. காரணி அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.
$14.6^2 - 5.4^2$

28. x = 3 எனின், $\left(\frac{1}{x}\right)^{-3}$ இன் பெறுமானத்தைக் காண்க.

29. உருவில் உள்ள தரவுகளின்படி PT இன் நீளம் யாது?





30. செங்கோண முக்கோணி ABC இன் சுற்றுவட்ட மையத்தில் இருந்து 5cm தூரத்திலும் A, B ஆகிய புள்ளிகளில் இருந்து சமதூரத்தில் உள்ளதுமான புள்ளிகள் இரண்டு உள்ளன என்பதை ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி ஒரு பருமட்டான வரை படத்தின் மூலம் காட்டுக.




### பகுதி B

01. ரூபா 90,000 பெறுமதி உடைய மின்சார உபகரணம் ஒன்றை வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கும்போது முதலில் உடன் பணத்தின் 1/5 ஐச் செலுத்தி மீதியை ஒவ்வொன்றும் ரூபா 4250 கொண்ட சமனான மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
 1) செலுத்த வேண்டிய முற்பணம் எவ்வளவு?
 2) எஞ்சிய தொகை எவ்வளவு?
 3) செலுத்த வேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?
 4) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
 5) மாதம் ஒன்றில் செலுத்தப்படும் கடன்பகுதி எவ்வளவு?
 6) ஆண்டு வட்டி வீதம் எவ்வளவு?

02. ABCDE ஓர் ஒழுங்கான ஐங்கோணி ஆகும். AC, BE, EC என்பன இணைக்கப்பட்டுள்ளன.
 1) $E\hat{D}C$ இன் பெறுமதி எவ்வளவு?
 2) $B\hat{A}C$, $A\hat{C}E$ இன் பெறுமானத்தைக் காண்க.
 3) AB// EC என நிறுவுக.
 4) முக்கோணி ABC இற்குப் பரப்பளவில் சமனான இன்னுமொரு முக்கோணியை எழுதுக. காரணம் தருக.





03. 90 மாணவர்கள் உள்ள வகுப்பொன்றில் 30% ஆனோர் வாய்ப்பாடு, வீணை, வயலின் என்பவற்றில் பரீட்சயமானவர்கள். 50% ஆனோர் வாய்ப்பாட்டும் வயலினும் பரீட்சயமானவர்கள் 3 1/3% ஆனோர் வயலினும், வீணையும் மட்டும் வாசிப்பவர்கள். வீணையும் வாய்ப்பாட்டும் மட்டும் பரீட்சயமானவர்கள் எவருமில்லை. வாய்ப்பாட்டு 50 பேர், வயலின் 49 பேர், வீணை 35 பேர்.
 1) இத்தகவல்களை வென்வரிப்படம் ஒன்றில் குறித்துக்காட்டுக.
 2) வயலின் மட்டும் வாசிப்போர் தொகை என்ன?
 3) யாதாயினும் ஒன்றில் மட்டும் பரீட்சயமானவர்கள் எத்தனை பேராகும்.
 4) இவற்றுள் எதிலும் பரீட்சயமற்றவர்கள் எத்தனை பேர்?

04. வேலைத்தளம் ஒன்றிற்கு கடந்த 3 மாதங்கள் வருகை தந்து ஊழியர் தொகை பற்றிய மீடிறன் பரம்பல் பின்வருமாறு:-

| ஊழியர் வரவு | 101-105 | 106-110 | 111-115 | 116-120 | 121-125 | 126-130 | 131-135 | 136-140 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட். எ/கை | 06 | 19 | 38 | 44 | 30 | 15 | 20 | 08 |

 1. மேற்குறித்த பரம்பலின் ஆகார வகுப்பு யாது?
 2. மேற்குறித்த பரம்பலின் இடைய வகுப்பு யாது?
 3. 116 - 120 என்ற வகுப்பாயிடையின் நடுப் பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக்கொண்டு ஊழியர்களின் வரவுக்கான இடையைக் காண்க.

05. 7cm ஆரையும் 20cm உயரமும் உடைய செவ்வட்ட உருளை வடிவ குற்றி ஒன்றில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட துண்டொன்றினை உரு காட்டுகின்றது.
 1) ஆரைச்சிறை ஒன்றின் பரப்பளவைக் காண்க.
 2) வளைந்த மேற்பரப்பின் பரப்பளவைக் காண்க.
 3) மொத்த மேற்பரப்பளவைக் காண்க.




**ஆசிரியர்: பி. குகதாசன்**
**சண்டிலிப்பாய்.**
**077 8175822**

வளரும்.....

இன்றைய கணித பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கான அனுசரணை வழங்குபவர்கள்
NSP ®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும் உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
Tell no:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவும் தாய்வானும் பிரச்சினைகளை பேச்சு மூலம் தீர்க்க முன்வர வேண்டும்

## ஷாங்காய் நகரில் பராக் ஒபாமா வலியுறுத்து



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோவைச் சந்தித்தபோது.............

ஷாங்காய், நவ. 18

''சீனாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்யவில்லை'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீனாவின் ஷாங்காய் நகர பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் திங்கட்கிழமை தாம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''தாய்வான் பிரச்சினையில் ஒரே சீனா என்ற கொள்கையைத்தான் இதுவரை அமெரிக்கா பின்பற்றி வருகிறது. இதில் எந்த மாற்றத்தையும் செய்ய நாங்கள் விரும்பவில்லை. எனவே, இரு தரப்பினரும், பிரச்சினைகளைத் தீர்க்க பேச்சுகள் நடத்தவேண்டும். வர்த்தக உறவுகளை மேம்படுத்திக்கொள்வதன் மூலம் இரு தரப்பினரும் பதற்றத்தைக் குறைத்துக்கொள்ள முடியும்'' என்றும் ஒபாமா ஆலோசனை தெரிவித்தார்.

''சீனாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்யவில்லை. அதன் வலிமையான, சுபீட்சமான வளர்ச்சியை அமெரிக்கா வரவேற்கிறது. சீனா தனது மக்களின் - தனிநபர் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் அது ஒவ்வொரு நாட்டினதும் வளர்ச்சியையும் விரும்பவே செய்கிறது'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''சீனா மீது எத்தகைய தடையும் விதிக்கப் படமாட்டாது. அதற்கான திட்டமும் அமெரிக்காவிடம் இல்லை. அதேசமயம், இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் சீராக இருக்கவேண்டும். இதையே அமெரிக்கா விரும்புகிறது'' என்றும் ஒபாமா தமதுரையில் சுட்டிக்காட்டினார்.

''பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினையில் அமெரிக்காவும், சீனாவும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்நடவடிக்கை ஏனைய வளர்முக, வளர்ந்த, தொழில்வள நாடுகளுக்கும் முன் மாதிரியாகத் திகழும்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''அல்-குவைதா தீவிரவாதிகள் இன்னும் அமெரிக்காவுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். அவர்கள் ஆப்கானிஸ்தான் எல்லையிலும், பாகிஸ்தானிலும் பெருமளவில் உள்ளனர். இவர்கள் மற்ற தீவிரவாத இயக்கங்களுடன் இணைந்து செயல்படும் நிலை இன்னும் தொடர்கிறது. எனவே, தலிபான் தீவிரவாதிகளை ஆப்கானிஸ்தானில் நிர்மூலமாக்குவது அமெரிக்காவிற்கு மிக அவசியமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா தாய்வானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வது தொடர்பாக மாணவர்கள் எழுப்பிய கேள்விக்கு ஒபாமா பதில் அளிக்க மறுத்துவிட்டார். தாய்வான் தனது எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி என்று சீனா கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

தகவல் மற்றும் ஊடகச் சுதந்திரம் பற்றிய மற்றொரு கேள்விக்கு ஒபாமா பதிலளிக்கையில், ''ஊடகச் சுதந்திரம் இருந்தால் தான் ஒரு நாடு வலிமையான வளர்ச்சியைப் பெறமுடியும். தணிக்கை செய்யாத செய்திகளை ஊடகங்கள் தருவதையே நான் விரும்புகிறேன்'' என்றார்.

ஷாங்காய் நகரில் அமைந்துள்ள நகர மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், ''சீனாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த நாம் நினைக்கவில்லை. அமெரிக்கா, வலுவான மற்றும் வளமான தேசமாக சீனா உருவாவதை வரவேற்கின்றது. எந்த ஓர் அரசமைப்பையும், எந்த ஒரு நாட்டின் மீதும் திணிக்க, அமெரிக்கா நினைக்கவில்லை'' என்றார்.

# தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்த பாகிஸ்தானிடம் கோரிக்கை

## அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் விடுத்தார்

பாகிஸ்தானின் வட வசீரிஸ்தான் பிராந்தியத்தில் பதுங்கியிருக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கும், அவர்களோடு இணைந்து செயல்படும் அல்-குவைதா தீவிரவாதிகளுக்கும் எதிரான அதிரடித் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துமாறு பாகிஸ்தானை அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் கோரியுள்ளார்.

இது விடயத்தில் பாகிஸ்தான் அசிரத்தை காட்டினால், அமெரிக்கா ஆப்கானிஸ்தானுக்கு மேலதிக படைகளை அனுப்பி, அப்படைகள் மூலமாக இத் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்ள ஜனாதிபதி ஒபாமா ஒப்புதல் அளித்துவிடுவார் என்றும் ஜோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் எல்லையையொட்டி, பாகிஸ்தானில வட வசீரிஸ்தான் பிராந்தியம் அமைந்துள்ளது. இங்கு பதுங்கியிருக்கும் தலிபான் தீவிரவாதிகளும், அல்-குவைதா தீவிரவாதிகளும் சில மாதங்களாக அரசுக்கு எதிரான தாக்குதலை கூட்டாக தீவிரவாதப் படுத்தியுள்ளார்கள்.

அதேவேளை, பெஷாவர் பிராந்தியத்திலும் தொடர் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள். இக்குண்டுத்தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். புலனாய்வுத்துறை தலைமையகக் கட்டடம், பொலிஸ் நிலையக் கட்டடங்கள், சந்தைப்புற கடைத்தொகுதிகள் ஆகியன சேதமடைந்துள்ளன.

இத்தீவிரவாதிகள் தம் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளமையால், அமெரிக்கா கவலை கொண்டுள்ளது. அதனால் தீவிரவாதிகளுக்கு எதிரான அதிரடி இராணுவ நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துமாறு அது பாகிஸ்தானை கோரியுள்ளது.

# நேபாளத்தில் உள்நாட்டுப் போர் மீண்டும் விரைவில் வெடிக்கும்!

## மாவோ உயர்மட்டத் தலைவர் எச்சரிக்கை

காத்மண்டு, நவ. 18

''நேபாளத்தில் மீண்டும் ஓர் உள்நாட்டு (சிவில்) போர் ஏற்படலாம்'' என மாவோயிஸ்ட் உயர்மட்டத் தலைவர் டாக்டர் பாபுராம் பட்டாராய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேபாளத்தில் ஏறக்குறைய 10 ஆண்டு காலத்திற்கும் மேலாக மாவோயிஸ்ட்டுகள் நடத்திய சிவில் போர், 2006 ஆம் ஆண்டு தான் முடிவுக்கு வந்தது.

"2006 ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதில் தெரிவிக்கப் பட்டிருந்தவாறு புதிய அரச சாசன வரைவு தீட்டப்படவேண்டும். இல்லையேல், நேபாளத்தில் மற்றுமொரு சிவில் போரை எதிர் கொள்ள நேரிடும்'' என்றும் பாபுராம் எச்சரித்துள்ளார்.

மக்களாட்சி அதிகாரமுறையை அமுல்படுத்த நேபாள அரசு முன்வரவேண்டும். இதில் தவறினால் நாளை 19 ஆம் திகதி முதல் புதிய போராட்டம் மேற்கொள்ளப்படும் என நேபாள மாவோவாதிகள் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சகலகலாவல்லவனாக மாறிவரும் ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின்

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் சகலகலாவல்லவனாக மாறி வருகிறார். சமீபத்தில் மீன் பிடித்து கலக்கினார். இப்போது ரெப் டான்ஸ் ஆடி அசத்தியுள்ளார். கூடவே பிரேக் டான்ஸையும் போட்டு பின்னியுள்ளார்.

மாஸ்கோவில் நடந்த இசை நிகழ்ச்சியொன்றின் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட புடின் திடீரென ரெப் டான்ஸும், பிரேக் டான்ஸும் ஆடி கூட்டத்தினரை குஷிப்படுத்தினார்.

புடின் திடீரென இப்படி ஆடுவார் என யாரும் எதிர்பார்க்கவில்லை. ரொம்ப மோசம் என்று சொல்ல முடியாத அளவுக்கு இருந்தது புடினின் ஆட்டம்.

அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இளைஞர்கள், புடினின் ஆட்டத்தைப் பார்த்து ஆரவாரித்தனர். 57 வயதான புடின் விளையாட்டு உடையில் வந்திருந்தார். புடின் மேடையில் ஆடியபோது அவருக்குப் பாதுகாப்பாக வந்த பாதுகாப்புப் படையினர் கூட்டத்தினர் மத்தியில் கலந்து கண்காணிப்பை மேற்கொண்டனர்.

பின்னர், நிகழ்ச்சியில் பேசிய புடின், மது, போதை இரண்டையும் இளைஞர்கள் தொடக்கூடாது. அது அவர்களை மட்டுமல்லாமல் கலாசாரத்தையும் கெடுத்துவிடும் என்று அறிவுரை வழங்கினார்.

## உலக அரங்கில்

# மாரடைப்பால் துடிப்பவரை பிழைக்க வைக்கலாம்!

## மருத்துவ ஆய்வில் தகவல்

லண்டன், நவ. 18

பொதுவாக மாரடைப்பால் பாதிக்கப்படுபவர்களின் உடல் குளிர்ந்துவிடும். அதன் பிறகு அவர்களின் இதயத்துடிப்பு அடங்கி உயிரிழந்து விடுவார்கள். தற்போது அவ்வாறு ஏற்பட்டாலும்கூட பாதிக்கப்பட்டவர்களை உயிர் பிழைக்க வைக்கமுடியும் என மருத்துவ ஆய்வில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

மாரடைப்பு ஏற்பட்டவுடன், பாதிக்கப்பட்ட நபரின் மூக்கின் வழியாக 'ரினோசில்' என்ற புதிய கருவியின் மூலம் மூளையில் சிறிய அளவில் குளிர்ச்சியை ஏற்படுத்தி நின்றுவிட்ட இதயத்தை மீண்டும் மருத்துவக் குழுவினர் இயங்க வைத்தனர்.

இந்த மருத்துவ ஆராய்ச்சியை ஸ்டாக்ஹோமைச் சேர்ந்த மருத்துவ பேராசிரியர் மாரட்கேஸ்டிரனும், அவரது குழுவைச் சேர்ந்தவர்களும் மேற்கொண்டனர்.

ஐரோப்பாவிலுள்ள 14 வைத்தியசாலைகளில் மாரடைப்பால் பாதிக்கப்பட்டு சேர்க்கப்பட்டிருந்த 200 பேரிடம் இந்த ஆய்வை மேற்கொண்டனர். இவர்களில் 182 பேர் உயிர் பிழைத்தனர். 18 பேரை மட்டும் அவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

# அணு ஆயுதங்களை வடகொரியா கைவிடுவதற்கு வாய்ப்பே இல்லை

## அமெ. முன்னாள் சிரேஷ்ட அதிகாரி

''அணு ஆயுதங்களை வடகொரியா கைவிடும் என எதிர்பார்க்க முடியாது. அதற்கான அறிகுறி கிடையாது'' என அமெரிக்க முன்னாள் சிரேஷ்ட தூதரக அதிகாரி டேவிட் ஸ்ட்ராப், சியோலில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் தாம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்காவுடனும், அணு ஆயுத ஒழிப்புத் தொடர்பான ஆறு நாடுகளைக் கொண்ட குழுவுடனும் வடகொரியா பேச்சுகளை நடத்தலாம். எனினும், எதிர்காலத்தில் அந்நாடு தனது அணு ஆயுதங்களைக் கைவிடுவதற்கான வாய்ப்பில்லை'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அணு ஆயுத ஒழிப்புத் தொடர்பான குழுவில் அங்கம் வகிக்கும் ஆறு நாடு களின் மூலமாக தனது அணு ஆயுதத் திட்டங்களைக் கைவிடுமாறு வடகொரி யாவை வலியுறுத்த அமெரிக்கா முயன்று வந்தது.

எனினும், தன்னுடன் அமெரிக்கா நேரடியாக முதலில் பேச்சுகள் நடத்த வரவேண்டும் என்றும் அப்படியானால்தான் ஆறுநாடுகளைக் கொண்ட குழுவுடனான பேச்சுகளில் தன்னால் ஈடுபடமுடியும் என்றும் வடகொரியா நிபந்தனை விதித்தது.

வடகொரியாவின் இந்நிபந்தனையை ஏற்றுக்கொண்ட அமெரிக்கா அதி விரைவில் வடகொரியாவுக்குத் தனது தூதர் ஒருவரை அனுப்ப தயாராகி வருகிறது. இந்நிலையில், எதிர்காலத்தில் அந்நாடு தனது அணு ஆயுதங்களை கைவிட வாய்ப்பில்லை என டேவிட் ஸ்ட்ராய் தெரிவித்துள்ளார்.

# வட சீனாவில் மண்சரிவு: 23 குடியேற்ற ஊழியர் பலி!

பீஜிங், நவ. 18

வட சீனாவில் ஏற்பட்ட மண்சரிவுக்குள் புதையுண்டு 23 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அருகிலுள்ள நிலக்கரிச் சுரங்க குடியேற்ற ஊழியர்களும், அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமாவர். ஐந்து வீடுகள் மண்சரிவுக்குள் புதையுண்டன. உடனடியாக இருவர் மாத்திரம் உயிருடன் மீட்கப்பட்டனர்.

சாங்ஜி மாகாணத்திலுள்ள ஜொங்யாங் பகுதியில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த சில நாள்களாக வட சீனாவில் பருவகாலத்துக்கு முன்னரே கடும் 'பனிப்பொழிவு கொட்ட ஆரம்பித்துள்ளது.

வடசீனாவிலுள்ள சாங்ஷி என்னுமிடத்தில் செப்ரெம்பரிலும் மண்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி 250 பேர் மரணித்துள்ளனர். இந்தப் பகுதியும் இதே மாகாணத்திலேயே அமைந்துள்ளது.

# ஒட்டிப் பிறந்த இரட்டையர் பிரிப்பு; ஆஸ்திரேலிய டாக்டர்கள் சாதனை

மெல்பேர்ன், நவ. 18

தலை ஒட்டிப் பிறந்த பங்களாதேஷ் இரட்டையர்களை 24 மணி நேர அறுவை சிகிச்சை செய்து பிரித்து ஆஸ்திரேலிய மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

பங்களாதேஷைச் சேர்ந்த கிருஷ்ணா, திரிஷ்ணா சகோதரிகளுக்கு 3 வயதாகிறது. இருவரும் இரட்டையர்களாகப் பிறந்தனர். தலை ஒட்டிய நிலையில் பிறந்ததால் இருவரையும் பிரிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில், ஆஸ்திரேலிய மெல்பேர்னிலுள்ள ரோயல் குழந்தைகள் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் 24 மணி நேர அறுவை சிகிச்சையை மேற்கொண்டு வெற்றிகரமாக இருவரையும் பிரித்துள்ளனர்.

16 டாக்டர்கள், பல தாதியர் ஆகியோரைக் கொண்ட இந்தக் குழுவினர் மிகவும் சிக்கலான இந்த அறுவை சிகிச்சையை கண்ணும் கருத்துமாக மேற்கொண்டு இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர்.

இந்தக் குழந்தைகளைத் தனியே பிரித்தது மிகவும் விசேடமானது என்று வைத்தியர் குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுட்காலத்தில் ஒருமுறை மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சை என்று இதனை மருத்துவ உலகம் வர்ணித்துள்ளது.

இந்தக் குழந்தைகள் இருவரும் ஒரு வார காலத்துக்கு மயக்க நிலையில் வைத்து கண்காணிக்கப்படவுள்ளனர். அதன் பிறகு பிளாஸ்டிக் சிகிச்சை மூலம் அவர்களுடைய மண்டை [illegible]

# ஈராக்கின் ஷாவ்பா கிராமத்தில் துப்பாக்கிச் சூடு; 12 பேர் பலி

பக்தாத், நவ. 18

ஈராக்கின் ஷாவ்பா கிராமத்தில் இராணுவ சீருடையில் வந்த துப்பாக்கிதாரியொருவர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் உயிரிழந்தனர். இக் கிராமம் மேற்கு பக்தாத்துக்கருகில் அமைந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் ஈராக்கிய இஸ்லாமியக் கட்சியைச் சேர்ந்த சில முக்கிய தலைவர்களும் அடங்குவர். இக்கிராமத்துக்குள் திங்கட்கிழமை அதிகாலை நுழைந்து வெறியாட்டம் ஆடிய இத்துப்பாக்கிதாரி, பின்னர் தப்பியோடிவிட்டார் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இது சுனி முஸ்லிம்கள் பெருமளவில் வசிக்கும் கிராமமாகும். இம் முஸ்லிம்களை இலக்கு வைத்தே மிலேச்சத்தனமான இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் தாக்குதலுக்கு முடிவில்லையேல் இலங்கை நோக்கிப் படை எடுப்போம்!

## 1,000 படகுகள் தயார் என்கிறது தமிழக மீனவர் பேரவை

இராமேஸ்வரம், நவ. 19

இலங்கைக் கடற்படையால் சித்திரவதைப்படும் மீனவர்களை இந்தியத் தமிழ் அகதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள்- இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்கப்படுகின்றனர். ஆனால், மத்திய அரசு மௌனமாக உள்ளது; இந்நிலை தொடர்ந்தால், 2010 ஜனவரி 14ஆம் திகதிக்கு பின்னர் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் கடற்கரையிலிருந்து ஆயிரம் படகுகளில் ஆயுதமின்றி இலங்கை நோக்கிப் படையெடுப்புப் போராட்டம் நடத்த உள்ளோம்.

- இவ்வாறு தமிழக மீனவர் பேரவைத் தலைவர் அன்பழகன் நேற்றுமுன்தினம் இரவு இராமேஸ்வரத்தில் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சித்திரவதை செய்கின்றனர். இறால், மீன்கள் கொள்ளையிடுகின்றனர். மேலும், படகுகளைச் சேதப்படுத்தி வருவதால் மீனவர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு சுமார் 60 சதவீதம் பேர் மீன் பிடிக்கச் செல்வதில்லை.

இலங்கை சென்ற மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைத் தமிழர், தமிழக மீனவர்களை பற்றி எதுவும் பேசவில்லை. தமிழக மீனவர்களை மத்திய அரசு 2ஆம் தரக் குடிமக்களாகக் கருதுகிறது.

மீனவர்களைப் பாதுகாக்க தவறிய மத்திய அரசைக் கண்டித்து 100 இற்கும் மேற் பட்ட வாகனங்களில் பேரணியாகப் புறப்பட்டு 21 ஆம் திகதி உலக மீனவர் தினத்தைக் கறுப்பு தினமாக அறிவிக்குமாறு தமிழக முதல்வரிடம் கோரிக்கை மனுக் கொடுக்கவுள்ளோம்.

இதன் பின்னர் நடவடிக்கை எடுக்கவில்லையெனில், தமிழக மீனவர்களை இந்திய அகதியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். பின்னர், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் கடற்கரையில் இருந்து ஆயிரம் படகுகளில் ஆயுதமின்றி இலங்கை நோக்கிப் படையெடுப்புப் போராட்டம் நடத்த உள்ளோம் - என்றார்.

பேட்டியின்போது, தென் மண்டல மீனவர் பேரவை செயலர் பாலசுப்பிரமணியம், இராமநாதபுரம் மாவட்ட மீனவர் பேரவை செயலர் முனியசாமி, காஞ்சிபுரம் மாவட்ட செயலர் கெரிலிங்கம், மாநில துணைத் தலைவர் மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# மீனவர் கடலுக்குச் செல்லத் தடை!

மண்டபம், நவ. 18

இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பருவமழை மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், கடலோர மாவட்டங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. இராமநாதபுரத்தை பொறுத்தவரை, மாவட்டம் முழுவதும் கன மழை கொட்டுகிறது. மன்னார் வளைகுடாப் பகுதி முதல், கன்னியாகுமரிவரை உள்ள கடல் பகுதியில், பலத்த காற்றுடன் மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் திடீரென கடல் சூழல் மாறியது. வழக்கமான காற்றின் வேகமும் குறைந்திருந்தது. கடலும் அமைதியாக காணப்பட்டது. மழை கொட்டும் வேளையில், கடலின் இந்த மாறுபட்ட சூழல் மீனவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

சுனாமி பேரலை ஏற்படுவதற்கு முன்பும் இதேபோன்று சூழல் இருந்தது என மீனவர்கள் தெரிவித்தனர். இந்நிலையில், மீனவர்கள் கடலுக்குச் செல்ல மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

கலெக்டர் ஹரிஹரன் கூறுகையில் -

மன்னார் வளைகுடாப் பகுதியில்தான் புயல் வலுப்பெற்றுள்ளது. குறிப்பாக, இராமேஸ்வரத்தின் வடமேற்கு பகுதியில் பலமான காற்று உள்ளது. மீனவர்கள் நலன் கருதி, அவர்கள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது - என்றார்.

**இந்தியச் செய்திகள்**

# குஜராத்தில் முகாமிட்டுள்ள இலங்கை அணிக்கு மிரட்டல்

## மைத்துனரை மாட்டிவிட இளைஞர் நடத்திய நாடகம்

பிலாஸ்பூர், நவ. 18

இந்திய - இலங்கை அணிகளுக்கி டையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்நிலையில், அகமதாபாத்தில் இலங்கை அணி மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு மர்ம மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதுபற்றி உளவுத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சைபர் கிரைம் பிரிவுப் பொலிஸார் விசாரணையைத் தொடங்கினர்.

அந்த மின்னஞ்சல், சத்தீஷ்கார் மாநிலம் பிலாஸ்பூரில் உள்ள இணையத்தள மையத்தில் இருந்து வந்திருப்பது தெரியவந்தது.

உடனே பொலிஸார் அங்கு சென்று மையத்தின் மேலாளரையும், ஊழியரையும் கைது செய்து விசாரித்தனர்.

ராஜேஷ் கர்ஷ் என்பவர் பெயரில் மின்னஞ்சல் வந்ததால், அவரையும் பிடித்து விசாரித்தனர். அவர் தனது தங்கையின் கணவரான அசோக் (வயது - 20) மீது சந்தேகம் தெரிவித்தார். அதன் பேரில் அசோக்கிடம் விசாரித்தபோது திடீர் திருப்பம் ஏற்பட்டது.

ராஜேஷ் கர்ஷின் தங்கையை அசோக் காதல் திருமணம் செய்து கொண்டார். இதை விரும்பாத ராஜேஷ், மது போதையில், அசோக்கை அடித்து உதைத்தார். அதற்கு பழிவாங்குவதற்காக ராஜேஷின் பெயரில் அசோக் இந்த மிரட்டல் மின்னஞ்சலை அனுப்பியமை தெரியவந்தது.

# ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தை அமுல்படுத்த இலங்கையை இந்தியா நெருக்க வேண்டும்

## விஸ்வ இந்து பரிஷத் வலியுறுத்து

மதுரை, நவ. 18

ஈழத் தமிழர்களின் நலனைப் பாதுகாக்க ராஜீவ்- ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை இலங்கை அரசு உடனடியாக அமுல்படுத்த இந்தியா வலியுறுத்த வேண்டும் - என்று விஸ்வ இந்து பரிஷத்தின் அகில உலகச் செயலர் பிரவீன் தொகாடியா தெரிவித்தார்.

இதுகுறித்து மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்றுமுன்தினம் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை மத்திய, மாநில அரசுகள் சரியான முறையில் கையாளவில்லை. இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே விசுவ ஹிந்து பரிஷத்தின் நிலைப்பாடு.

இந்த வகையில் ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தன மேற்கொண்ட ஒப்பந்தத்தை இலங்கை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இதை இலங்கையிடம் இந்தியா வலியுறுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகள் பிரச்சினை என்பது வேறு விடயம். தற்போது இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முறையான நிவாரணமும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை சென்று திரும்பிய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இதை வலியுறுத்தாதமை ஏன் என்று தெரியவில்லை.

தமிழகத்தில் உள்ள பல்வேறு கோயில்களில் ஒருகாலப் பூஜைகள் கூட நடைபெறுவதில்லை. கோயில்களில் வருமானம் அதிகரித்துள்ளது.

எனவே, கிறிஸ்தவ ஆலயங்கள், மசூதிகள் போல, இந்துக் கோயில்களை இந்து அமைப்புகளிடமே ஒப்படைத்து பராமரிக்கப்பட வேண்டும் - என்றார்.

# ஆந்திராவில் வெடிவிபத்து; 15 பேர் பலி

ஐதராபாத், நவ. 18

ஆந்திராவில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 15 பேர் சம்பவ இடத்திலே பலியானார்கள். 20 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

ஆந்திரா மாநிலம், குண்டூர் மாவட்டம் டாசீபள்ளி தாலுகா, நாராயணபுரம் கிராமத்தை சேர்ந்தவர் வெங்கடேஸ்வரராவ். இவர் தனது வீட்டில் கல்குவாரிகளுக்கு தேவையான வெடிபொருள்கள், ஜெலட்டின் குச்சிகளை விற்பனை செய்து வந்தார். இதற்கு இவர் முறையான அனுமதி பெறவில்லை.

நேற்றுமுன்தினம் காலை வெங்கடேஸ்வரராவின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த காஸ் சிலிண்டர்கள், வெடிபொருள்கள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறின.

ஜெலட்டின்குச்சி வெடிப்பு சிதறல்களிலும் கட்டட இடிபாடுகளிலும் ஏராளமானோர் சிக்கி தவித்தனர். தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று இடிப்பாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர்.

இதில் வெங்கடேஸ்வரராவ் அவரது மனைவி உட்பட 15 பேர் சம்பவ இடத்திலே பலியானார்கள். 20 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்களை சிகிச்சைக்காக அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்த விபத்தில் வெங்கடேஸ்வரராவின் வீடு பலத்த சேதமடைந்தது. மேலும் அருகில் உள்ள 10 இற்கும் மேற்பட்ட வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

# இந்திய அணு சக்தி நிலையங்களைத் தகர்க்க தீவிரவாதிகள் சதி வெளியானது; உச்ச அளவில் பாதுகாப்பு

டில்லி, நவ. 18

கல்பாக்கம் உட்பட இந்தியா முழுவதும் உள்ள அணுசக்தி நிலையங்களை தகர்க்கும் தீவிரவாதிகளின் சதித்திட்டம் வெளியானது. அதைத்தொடர்ந்து, அனைத்து அணுசக்தி நிலையங்களுக்கும் உச்சக்கட்டப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

டில்லியிலுள்ள இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில், பாகிஸ்தான் உளவாளி ஒருவன் கடந்த ஞாயிறன்று பிடிபட்டான்.

அமீர் அலி என்ற பெயரில் போலிக் கடவுச்சீட்டில் சவுதி அரேபியாவுக்கு செல்ல முயன்றபோது பொலிஸாரிடம் அவன் சிக்கினான். அவனுடைய உண்மையான பெயர், அப்துல்லா. 45 வயது மதிக்கத்தக்க அப்துல்லாவிடம் புலனாய்வுத் துறைப் பொலிஸார் நடத்திய விசாரணையில், சவுதி அரேபியா வழியாக பாகிஸ்தானுக்கு செல்ல அவன் திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

தீவிர பயிற்சி பெற்ற பாகிஸ்தான் உளவாளியான அப்துல்லா, எல்லைப்பகுதியில் உள்ள இந்திய இராணுவத்தின் பலம் பற்றிய தகவல்களை இன்டர்நெட் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பி வந்தான்.

உளவாளி அப்துல்லா கைது செய்யப்பட்ட தகவல், மத்திய உள்துறை செயலாளருக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது. அப்துல்லாவிடம் நடத்திய விசாரணை பற்றி அதிகாரபூர்வமாக எந்தத் தகவலையும் தெரிவிக்க பொலிஸார் மறுத்துவிட்டனர்.

பாகிஸ்தான் உளவாளி அப்துல்லா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் உள்ள அணுசக்தி நிலையங்களை தகர்க்க தீவிரவாதிகள் தீட்டிய சதித்திட்டம் பற்றிய திடுக்கிடும் தகவல் புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு தெரிய வந்தது.

அதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் சென்னை அருகே உள்ள கல்பாக்கம், நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையங்கள் உள்ளிட்ட இந்தியா முழுவதிலும் உள்ள அணுசக்தி நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டன. முன் எச்சரிக்கையாக அனைத்து அணுசக்தி நிலையங்களிலும் பாதுகாப்பு எற்பாடுகளை பலப்படுத்தும்படி மாநில அரசுகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# சச்சினுக்கு பால் தாக்கரே எச்சரிக்கை!

மும்பை, நவ. 18

சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டில் மட்டும் கவனம் செலுத்தட்டும். அரசியல் பற்றி பேச வேண்டாம் - என்று சிவசேனா தலைவர் பால் தாக்கரே எச்சரித்துள்ளார்.



டெண்டுல்கர் அவர் அளித்த பேட்டி ஒன்றில், மராட்டியன் என்பதில் பெருமைப்படுகிறேன். எனினும் முதலில் நான் இந்தியன். மும்பை மராட்டியர்களுக்கு மட்டுமின்றி இந்தியர்கள் அனைவருக்கும் சொந்தம் என்று கூறியிருந்தார். இதற்கு பால் தாக்கரே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிவசேனா பத்திரிகையான சாம்னாவில் அவர் எழுதியுள்ள கட்டுரையில், மும்பை பற்றி டெண்டுல்கர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தேவையற்றவை. இது போன்ற துடுக்குத்தனமான பேச்சுக்கள் அவருக்குத் தேவையில்லை. கிரிக்கெட் விளையாட்டில் மட்டும் அவர் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் பேசாமல் இருப்பது நல்லது. மும்பைக்காக போராடிய மராட்டியர்கள் 105 பேர் உயிர்த்தியாகம் செய்தனர். அப்போது சச்சின் பிறக்கவே இல்லை - என்று கூறியுள்ளார்.

# கருவறையில் பெண்களுடன் உல்லாசம்: காஞ்சிபுரம் அர்ச்சகர் நீதிமன்றில் சரண்!

காஞ்சீபுரம், நவ.17-

கோவிலுக்குள் பெண்களுடன் உல்லாசமாக இருந்த வழக்கில் தேடப்பட்ட காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அர்ச்சகர், நீதிமன்றில் சரணடைந்தார்.

காஞ்சீபுரம் மாவட்டம் வாலாஜாபாத் அருகேயுள்ள பழைய சீவரம் கிராமத்தை சேர்ந்தவர் தேவநாதன் (வயது - 35). இவர் காஞ்சீபுரம் பஸ்நிலையம் அருகே உள்ள ஸ்ரீமச்சேஸ்வரர் கோவிலில் அர்ச்சகராக இருந்தார். கோவில் கருவறையில் பல பெண்களுடன் அவர் 'செக்ஸ் 'லீலை'களில் ஈடுபட்ட ஆபாசக் காட்சிகள் வெளியானதை அடுத்து பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து காஞ்சீபுரம் மாவட்ட பொலிஸார் அர்ச்சகர் தேவநாதன் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

பொலிஸார் தன்னைத் தேடுவதை அறிந்த தேவநாதன் தலைமறைவாகிவிட்டார். முன்பிணை கேட்டு, சென்னை உயர்நீதிமன்றில் அவர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், அவர் பொலிஸாரிடம் சிக்காமல் 'டிமிக்கி' கொடுத்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று பிற்பகலில் அர்ச்சகர் தேவநாதன், காஞ்சீபுரம் முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றில் மாஜிஸ்திரேட்டு சுதா முன்னிலையில் சரண் அடைந்தார்.

அதைத்தொடர்ந்து வரும் 30 ஆம் திகதி வரை அர்ச்சகர் தேவநாதனை காவலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட்டு சுதா உத்தர விட்டார். நீதிமன்றில் இருந்து வெளியே வந்த தேவநாதன், பின்னர் காஞ்சீபுரம் கிளை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

3 பெண்களிடம் அவர் கோவிலுக்குள் உல்லாசமாக இருந்தார் என கூறப்பட்டது.

'கோவிலுக்குள் உல்லாசமாக இருந்தால் இளமையோடு இருக்கலாம்'' என்று பெண்களிடம் ஆசை வார்த்தை கூறி, அந்தப் பெண்களை இவர் சம்மதிக்க வைத்தார் எனவும் கூறப்படுகிறது. இந்த உல்லாசக் காட்சிகளை அவருடைய செல்போன் மூலமே தேவநாதன் படம் எடுத்திருக்கிறார்.

பழுதடைந்த செல்போனை சரி செய்வதற்காக செல்போன் கடையில் கொடுத்த போதுதான் இந்த ஆபாசக் காட்சிகள் பற்றிய தகவல் வெளியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அமரர் பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி நினைவுப் பேருரை

**Sangam bards and bardic tradition: Dravidian perspectives**

பாணர் மரபு - பழங்குடிப்பாணர், வீரயுகப்பாணர், பிற்காலப்பாணர்: திராவிட இனவரைவியல் நோக்கு

பேருரை வழங்குநர் : முனைவர் பக்தவஸ்சல பாரதி
Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry, India

இடம்: நூலக கேட்போர் கூடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திகதி: 18.11.2009
நேரம்: மு.ப 10.00

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பதிவாளர்.** (சி/562457)

## நல்லூர் பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் கருத்தரங்கு - 2

★ காலம் - 20.11.2009 வெள்ளிக்கிழமை
★ நேரம் - பி.ப 2.30 மணி
★ இடம் - நல்லூர் பிரதேச செயலக மண்டபம்
★ விடயம் - நீரிழிவு நோயில் மூலிகைகளின் பங்கு ஒருபார்வை

கருத்துரை வழங்குபவர் - Dr.க.ஸ்ரீதரன் BSMS (SL) m.Phil (JF)

ஆர்வமுள்ளோர் பங்குபற்றலாம்

தலைவர்
ஆ.வே.பா. நல்லூர்.

(91175)

இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி.
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

**பீம் வாசக சிரப் (Vasaka Syrup)**
இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமர்ஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
*Beamhela osulanka (PVT) LTD*
*18/263 Kethsiry Place*
*High Level Road, Kottawa*
*Pannipa Panniptiiya*
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567
(சி/562080)

## 60 ஆவது திருமண வாழ்த்து

18.11.2009



**திரு.திருமதி
தங்கவடிவேல் நாகம்மா**
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

இறைவன்
அருளுடன்
என்றும் இனிதே
பல்லாண்டு காலம் நலமுடன்
வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்: திரு. திருமதி தம்பிராஜா
பொற்றொழிலாளர் வீதி, பெரிய அரசடி,
சாவகச்சேரி. (90874)

வாழ்த்துவோர்:
ச.கார்த்திகேசு (தந்தை), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மீண்டும் யாழ்.மண்ணில் ஆயுர்வேத மூலிகைத் தயாரிப்புக்கள்

**LINK NATURAL PRODUCTS (Pvt)Ltd**
நிறுவனத்தின்
சகலவிதமான மூலிகைத் தயாரிப்புகளை
தற்போது யாழ்.குடாநாட்டில்
பெற்றுக்கொள்ளலாம்

LINK NATURAL

ஆயுர்வேத வைத்தியர்களுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

ஏக விநியோகஸ்தர்:-
**SARAS ENTERPRISES,**
328, Hospital Road, Jaffna. T.P.:- 021 5100105
Hot Line: 0772365874,0772365880

## பகிரங்க விற்பனை சம்பந்தமான அறிவித்தல்

பொன்னாலை வயல் வெளியில் பிடிக்கப்பட்ட காட்டு மாடு ஒன்று 19.11.2009 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தொல்புரம் கமநல சேவைகள் நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தரால் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்..
விவரம்: நாம்பன் மாடு 1 கறுப்பு நிறம்.

## யாழ்.மாணவர்களுக்கு அரியவாய்ப்பு

உங்கள் உயர்கல்வியை U.K, USA, CANADA, NEWZEALAND, AUSTRALIA, SINGAPORE, மற்றும் MALASIYA போன்ற நாடுகளில் தொடர்வதற்குரிய வசதிகளை மிகக் குறைந்த செலவில் செய்து தருகிறோம்.

★ கல்லூரிக் கட்டணத்துக்கான இலகுகடன் வசதி
★ வங்கிவைப்புக்குரிய சுலபமான வசதிகள்
★ பகுதிநேரத் தொழில் வாய்ப்புடன் கூடிய கல்வி
★ சேவைக்கான கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு : 0772299900

(91171)

## தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளை திறப்புவிழா

தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக்கிளை எதிர்வரும் 20ஆம்திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இராச வீதி, அச்சுவேலிச் சந்தியில் உள்ள வங்கி வளாகத்தில் தேசிய சேமிப்பு வங்கிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியில் இது செயற்படவுள்ளது.

அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளராக எஸ்.நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். (50-11)

## வலி.கிழக்குப் பிரதேச சபையை தரம் உயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல்

அச்சுவேலி, நவ. 18

இன்று வலி.கிழக்குப் பிரதேச சபை நகரசபையாகத் தரம் உயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு வலி.கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நகரசபையாகத் தரம் உயர்த்துவது தொடர்பான உரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி எம். வசந்தகுமார் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

பிரதேச வரியிறுப்பாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் அதிகாரிகள், ஆர்வலர்களைக் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைக்குமாறு வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலர் த.நடராசா அறிவித்துள்ளார். (50-11)

## விஞ்ஞான தினமும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினமும், 'மத்திய ஆய்வாளன்' சஞ்சிகை வெளியீடும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

விஞ்ஞான மன்றத் தலைவர் பா.ஷரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யு.என்.டி.பி. நிறுவனத்தின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி கே.வி.நிசாந்தன் கலந்து கொள்வார்.

சஞ்சிகையின் ஆய்வுரையை யாழ்.கல்வி வலய ஆசிரிய நிலைய முகாமையாளர் ஞா.இரத்தினசிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற் பிரதியை யாழ். சம்பத் வங்கி முகாமையாளர் [illegible] பெறவுள்ளார். (50-204)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் தேவகுமார்

(பஞ்சிகாவத்தை ஜேசன் ஓட்டோ மொபைல்ஸ் உரிமையாளர்)



இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தேவகுமார் 15.11.2009 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் (யாழ்.ஸ்ரான்லி வீதி, சோமசுந்தரம் அன் கம்பனி) - செல்வராணி தம்பதிகளின் அன்பு மகனும், தரன், அனிதா, ஜேசன், லக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகுமார், கிருசாந்தா, நிர்மலா, மீனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மநாபன், பஞ்சலிங்கம், லக்ஸ்மன், சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (19.11.2009) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் இறுதிகிரியைகள் நடைபெற்று பொரளை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: S.சூரியகுமார்
கொழும்பு-4 (சி/562501) 0718317027, 0716109612

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 22 |
| 06 | 11 |
| 1925 | 2006 |



### வைரமுத்து செல்லையா

18.11.2009

ஆண்டுகள் மூன்று ஓடினாலும்
அழுத குரல் ஓயவில்லை
மாண்டதென்று யார் சொன்னார்
மனதில் என்றும் நீ நிறைந்தாய்
தேறுதல் சொல்லத் தெய்வமே வந்தாலும்
தேறிடுமோ எமதுள்ளம் தெரியாதோ இது உமக்கு
ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதிகாண என்றும்
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம் சாந்தி சாந்தி.

*கோண்டாவில் கிழக்கு*
*(தளையசிங்கம் கடையடி).* (சி/562453)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி விஜிதா தங்கவேலாயுதம் அவர்களின் பாசமிகு தந்தையாரான

### கிட்ணபிள்ளை தங்கவேலாயுதம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

(91182)

## 6 மாத கால ஆங்கிலக் கற்கைநெறி

**ENGLISH FOR BUSINESS & COMMUNICATION**

அனுபவமிக்க ஆசிரியர்களினால்........

- அடிப்படையில் இருந்து கற்றுக் கொள்ள...
- உங்கள் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ள விசேட பயிற்சிகள்......
- வசதியான நேரத்துக்கு வகுப்புகளை அமைத்துக் கொள்ள......
- வகுப்புகளில் வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர் ( 10-15 மாணவர்கள் )
- முதல் 50 மாணவர்களுக்கு பதிவு கட்டணம் விலக்களிக்கப்படும்....
- 100 மாணவர்கள் மட்டும் முதல் 6 மாத கால கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவர்..

உங்கள் பதிவுகளை 30.11.2009ற்கு முன்னர் மேற்கொள்ளவும்

ALLIANCE INSTITUTE
NO 25, Somasundaram Avenue, Chundikuli, Jaffna
TEL: 0212228193/0215670350/0773296407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு விடயங்கள் குறித்து ஒரே நாளில் விவாதம்; எதிர்த்து ஐ.தே.க. சபையிலிருந்து வெளிநடப்பு!

கொழும்பு, நவ.18



நாடாளுமன்றில் நான்கு நாள்கள் விவாதம் நடத்தப்படவேண்டிய விடயங்களை ஒரே நாளில் விவாதத்துக்கு எடுக்க அரசு முடிவெடுத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்ற அலுவல்களைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்தனர்.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாத பிரேரணையின் அடிப்படையில் விவாதம் நடத்துவது சட்டவிரோதமானதும், எம்.பிக்களின் சிறப்புரிமைகளை மீறும் நடவடிக்கையுமாகும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

''ஆகவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் வெளிநடப்புச் செய்கிறோம்'' என்று கூறிவிட்டு ஐ.தே.க. எம்.பிக்கள் அனைவரும் சபையை விட்டு வெளியேறினர்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம், மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவை அமைச்சுக்கான குறைநிரப்புப் பிரேரணை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் செஸ் வரி தொடர்பான கட்டளை மற்றும் தாவரப் பாதுகாப்பின் கீழான ஒழுங்கு விதிகள் ஆகிய 4 விடயங்களையும் ஒரேநாளில் விவாதித்து நிறைவேற்ற அரசு முடிவெடுத்தது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைச் சபையில் கூறியதும் சபையில் சர்ச்சை தொடங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஜே.வி.பியும் இதை கடுமையாக எதிர்த்தனர்.

இப்படியொரு பிரேரணை இன்றைய (நேற்றைய) நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இல்லை என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

ஒழுங்குப் பத்திரத்தில் இல்லாத விடயத்தை எப்படி நாடாளுமன்றில் விவாதிக்க முடியும் என்று ஜோஸப் மைக்கல் பெரேரா சபா நாயகரிடம் கேள்வி யெழுப்பினார்.

''அரசுக்குப் பெரும்பான்மை இருப்பதால் எந்தப் பிரேரணையையும் கொண்டு வந்து விவாதத்தில் அதை நிறைவேற்ற முடியும். ஆனால், அரசு நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மதித்துச் செயற்பட வேண்டும். அப்படியில்லாவிட்டால் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரம் என்ற ஒன்று தேவையில்லை.'' - என்று ஐ.தே.கட்சி எம்.பியான தயாசிறி ஜயசேகர கூறினார்.



**ஜனாதிபதியின் பிறந்தநாள் இன்று**

''இம்மாதம் 17,18,19,20 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் கூட ஏற்பாடாகியிருந்தது. ஆனால், 18,19,20ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தை நடத்த முடியாது என்று அரசே கூறியது. 18 ஆம் திகதி (இன்று) ஜனாதிபதியின் பிறந்தநாள் என்பதால் 19,20 ஆம் திகதிகளிலும் அடுத்த வாரம் திங்கட்கிழமையும் நாடாளுமன்றத்தை நடத்த முடியும். சமர்ப்பிக்கப்படும் விடயங்களுக்கு நாம் எதிர்ப்பல்ல. அவை கொண்டுவரப்படும் முறையையே எதிர்க்கின்றோம்.'' - என்று ஜே.வி.பியின் எம்.பியான பிமல் ரட்நாயக்க கூறினார்.

இதற்கு அரசு உடன்படவில்லை. இதனால் எதிர்க்கட்சிகளுக்கும் அரசுக்கு மிடையில் நீண்ட வாக்குவாதம் இடம்பெற்றது. இறுதியில் நான்கு விடயங்களையும் ஒரே நாளிலேயே விவாதிக்க வேண்டும் என்று அரசு உறுதியாக முடிவெடுத்ததால் ஐ.தே.க. அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சகையிலிருந்து வெளிநடப்புச் செய்தது.

'' நாடாளுமன்றில் இடம்பெறும் விடயங்களை மக்கள் அறியும் உரிமை இதன்மூலம் இல்லாமல் செய்யப்படுகிறது. உறுப்பினர்களின் சிறப்புரிமை முற்றாக மீறப்படுகின்றது. இது சட்டவிரோதமாகும். இதை எதிர்த்து நாம் வெளிநடப்புச் செய்கிறோம்.' - என்று ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

இதனைத் தொடர்ந்து ஐ.தே.கட்சி எம்.பிக்கள் அனைவரும் சபையை விட்டு வெளியேறினர். (அ-சி)

## மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் எப்.ரி. எடிசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தனும் சிறப்பு விருந்தினராக இயேசுசபை அகதிப் பணியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அருட்பணி தே.எட்வின் அடிகளாரும் கலந்து கொள்வர்.

மிருசுவில் நலன்புரி நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பிற இடங்களில் வசிக்கும் மேற்படி பாடசாலையில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிய ஆசிரியர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (1-7)

## டெங்குநோய் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் கரணவாய் மகாவித்தியாலய மாணவர்கள்

யாழ்ப்பாணம், நவ.18

டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கரணவாய் மகாவித்தியாலய மாணவர்கள் பாடசாலைச் சூழலை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தியதுடன் பிரதேச மக்களுக்கும் விழிப்புணர்வை ஊட்டியுள்ளனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி பாடசாலையைச் சுத்தம் செய்த மாணவர்கள் டெங்கு நோய் தொடர்பான படக்காட்சியையும் காண்பித்தனர்.

தொடர்ந்து கடந்த 13 ஆம் திகதி டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் பிரசார நடவடிக்கைகளில் வீடு வீடாகச் சென்று ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வுகளை கரணவாய் சுகாதாரப் பரிசோதகர் வழிகாட்ட பாடசாலை சுகாதார மன்றத்தினர் முன்னெடுத்தனர்.(1-10)

## அரச களஞ்சியத்திலுள்ள கோதுமை மா பேக்கரிச் சங்கங்களுக்கு இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.18

அரச களஞ்சியங்களில் இருக்கின்ற கோதுமை மா பேக்கரி சங்கங்களுக்கு இன்று முதல் விநியோகிக்கப்படவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச உணவுக் களஞ்சியங்களில் இருக்கின்ற கோதுமை மா பாவனைக்கு உகந்தது என சுகாதாரத் திணைக்களம் சிபார்சு செய்துள்ளது.

எனவே பேக்கரிச் சங்கங்களுக்கு கோதுமை மாவினை விநியோகிக்குமாறு நீதி மன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக பேக்கரிச் சங்கங்களுக்கு இன்று தொடக்கம் மா விநியோகம் மேற்கொள்ளவதற்கு மாவட்டச் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும் ப.நோ.கூ. சங்கங்களில் மாவட்ட செயலகத்தினால் விநியோகிக்கப்பட்ட மாவும் விற்பனைக்கு உகந்தது எனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது - என்றுள்ளது.

## வவுனியாவில் முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளோர் நிவாரணம் பெறுவதில் சிரமம்

வவுனியா, நவ. 18

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு வவுனியா பிரதேசங்களில் குடியமர்ந்துள்ள மக்கள் தமது கிராமங்களின் கிராமசேவையாளர்களின் அசமந்தப் போக்குக் காரணமாக நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். வவுனியா, கூமாங்குளம் மற்றும் தோணிக்கல் பகுதிகளில் தங்கியுள்ள மக்களே இவ்வாறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்துவாழும் இந்த மக்களுக்கு உலக உணவுத்திட்ட நிறுவனம் நிவாரண அட்டைகளை வழங்கியுள்ளது. குறிப்பாக கடந்த மே, ஜூன் மாதங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு இவர்களுக்கான நிவாரண அட்டைகள் ஏற்பாடுசெய்யப்பட்டன.

எனினும் இவர்கள் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு வவுனியாவில் குடியமர்ந்த நிலையில் இவர்களுக்கான பதிவுகளையும், நிவாரண ஒழுங்குகளையும் மேற்கொள்வதில் கிராமசேவகர்கள் பாராமுகமாகச் செயற்படுகின்றனர். என மக்கள் முறையிடுகின்றனர்.

இதனால் நிவாரணம் பெறுவதற்காக கூட்டுறவுக்கடைகளுக்குச் செல்லும் மக்கள் ''உங்கள் பதிவுகள் வரவில்லை'' என்று கூறப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சம்பந்தப்பட்டதரப்பினர் இதற்கான உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்து தமக்கு நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறு அந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (1-10-400)

## பேராசிரியர் வித்தியானந்தனுக்கு பல்கலைக்கழகத்தில் உருவச்சிலை

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் பேராசிரியருமான சுப்பிரமணியம் வித்தியானந்தனின் உருவச் சிலைத் திறப்பும் நினைவுப் பேருரை நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வித்தியானந்தன் நூலகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் அவரது உருவச் சிலை திறந்து வைக்கப்படும். தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு நூலகக் கேட்போர் கூடத்தில் '' யாழ்ப்பாணப் பண்பாட்டு: மறந்தவையும் மறைந்தவையும்'' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை இடம் பெறும்.

பேருரையை தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-10)

## சரத் பொன்சேகாவுக்கு போதியளவு பாதுகாப்பு ஜனாதிபதியின் பணிப்பிற்கு அமைய வழங்கப்படும்

கொழும்பு, நவ.18

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அவர் கேட்டுக் கொண்ட பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவிடம் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அவர் உரிய வீடொன்றுக்கு மாறும் வரை இராணுவத் தளபதிக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே இருக்கலாம் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்கென 70 விசேட அதிரடிப் படையினரையும், குண்டு துளைக்காதவாகனமொன்றையும் அவரது வாசஸ் தலத்துக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான வாகனங்களையும் அரசு வழங்க முன்வந்துள்ளது எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தவேளை ஜெனரல் சரத் பொன்சேகா மீண்டும் தனது பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார் எனவும் இதற்கு ஜனாதிபதி இணங்கிவிட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# பொன்சேகாவை அவமதித்த முப்படைகளின் தளபதிகள்!

கொழும்பு, நவ.18

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அளிக்கப்பட்ட விசேட இராணுவ மரியாதையைப் புறக்கணித்ததன் மூலம் முப்படைத் தளபதிகளும் அவரை அவமதித்து விட்டனர் என்று 'ஏசியன் டிரிபியூன்' இணையத் தளம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

ஜெனரல் சரத் பென்சேகா ஓய்வு பெறுவதை முன்னிட்டு திங்கட்கிழமை அவருக்கு அளிக்கப்பட்ட இராணுவ அணி வகுப்பு மரியாதையை முப்படைகளின் தளபதிகளும் பகிஷ்கரித்துள்ளனர்.

பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொள்ளும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கான இராணுவ அணிவகுப்பு மரியாதையைப் புறக்கணித்ததன் மூலம் முப்படைகளின் தளபதிகளும் அவரை மோசமாக அவ மதித்துள்ளனர் என்று அரசியல் வட்டாரங்கள் 'ஏசியன் டிரிபியூனு'க்குத் தெரிவித்துள்ளன.

இராணுவத்தளபதியாகப் பணியாற்றிய காலத்தில் இராணுவத்தின் அனைத்து மட்டத்தினரினதும் மனதை வென்ற ஒருவரை இவ்வாறு அவமதித் திருக்கக் கூடாது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ அணிவகுப்பில் முப்படைத் தளபதிகள் கலந்து கொள்ளாதமை பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நாடாளுமன்ற மைதானத்தில் உள்ள யுத்த வீரர்கள் நினைவகத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த சரத் பொன்சேகாவிடம் பிரியாவிடை குறித்து உங்களுக்குத் திருப்தியா எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா, ''இராணுவம் நன்மையளிக்கும் பாரம்பரியங்களைத் தொடர்ந்து பேணுவது மிக முக்கியமானது. நான் எப்போதும் பாரம்பரியத்தை மதிப்பவன். பாரம்பரியத்தை [illegible] பாதுகாக்க வேண்டும்'' - என்றார். (அ-சி)




கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் அண்மையில் கொடூரமாகத் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறைக்கு முன்னால் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மங்கள சமரவீர மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டிருக்கின்றமையைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் மோதல்; 4 பேர் காயம்

கொழும்பு, நவ. 18

அனுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று அதிகாலை இரு கைதிகளிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் நால்வர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து உதவிச் சிறைச்சாலை ஆணையாளர் கெனத் பெர்னாண்டோ கூறியவை வருமாறு -

நேற்று அதிகாலை அதிகாரி ஒருவர் கைதிகளைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் நான்கு கைதிகள் கயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதுடன் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வாரியபொல பொலிஸ் நிலையத்திலிருந்து அதிகாரி ஒருவர் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் - என்றார். (சி)

# யாழ்.மாவட்டத்தில் தங்கிய வெளிமாவட்ட அகதிகள் 248 பேர் இன்று சொந்த இடங்களுக்கு செல்கின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 104 குடும்பங்களைச் சேர்ந்த 248 பேர் இன்று சொந்த இடங்களுக்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 28 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 37 குடும்பங்களைச் சேர்ந்த 106 பேரும் இன்று அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்.

யாழ்.செயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் இவர்களை அழைத்துச் சென்று சம்பந்தப்பட்ட மாவட்ட செயலக அதிகாரிகளிடம் ஒப்படைப்பார். (அ-1)

## முகாம்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுவர் கொண்ட குழு, நேற்று பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

அகதி முகாம்களில் உள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றைய சந்திப்பில் தாங்கள் விவரமாக எடுத்து விளக்கியதாக அக்குழுவில் அங்கம் வகித்த என்.சிறிகாந்தா எம்.பி. தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவர் தெரிவித்தவையாவது:-

✱ இந்தச் சந்திப்பில் பஸில் ராஜபக்ஷவுடன் நீதி அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பங்குபற்றினார். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் குறைபாடுகள், பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளித்தோம். பின்வரும் கோரிக்கைகளை அவரிடம் முன்வைத்தோம்.

✱ முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள்குடியமர்ந்தவர்களைக் கைது செய்யும் செயற்பாடுகள் சாவகச்சேரியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு முழு விசாரணைகள் முடிவுற்ற நிலையில் மீள் குடியமர்த்தப்பட்டவர்கள், தொல்லைகள் எதுவும் இன்றி வாழ அனுமதிக்க வேண்டும். இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு வலியுறுத்தினோம்.

✱ இடம்பெயர்ந்த மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களைக் கைது செய்யும் போது, அவர்களது உறவினர்களுக்கு 'ரசிது' வழங்க வேண்டும்.

✱ முகாம்களில் உள்ளவர்களுக்கு அரிசி, கோதுமை மா, பருப்பு, சீனி ஆகியவற்றுடன் மேலதிகமாக மரக்கறி வகைகளை வழங்க வேண்டும்.

✱ போதியளவு பால்மா கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மீளக்குடியமர்ந்தவர்களுக்குப் போதுமான அளவு கொடுப்பனவு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம். - என்றார். (அ-1)

## வெளிமாவட்டங்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி விடுத்துள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தை நிரந்தர வதி விடமாகக் கொண்டவர்கள் பாதுகாப்பு அனுமதியின்றித் தமது தேசிய அடையாள அட்டையின் 3 நிழற்பிர்திகளைச் சமர்ப்பித்து பயணத்தை மேற்கொள்ளமுடியும் என்று ஆளுநர் அறிவுறுத்தியுள்ளதாக அரச அதிபர் மேலும் கூறினார்.

ஏ-9 பாதையூடாக பாதுகாப்புப் படையினரின் பயண அனுமதியின்றி இ.போ.ச. பஸ்களில் பயணம் மேற்கொள்ள கடந்த 14 ஆம் திகதி முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது தெரிந்ததே. (அ-1)

## ஏ-9 பாதையூடாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து பயணத்தை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

இதுவரை ஏ-9 பாதையூடாக கொழும்பில் இருந்து மட்டும் தனியார் லொறிகள் மட்டும் சேவைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த லொறிகள் அத்தியாவசியத் சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டு பல மாதங்கள் கழிந்த பின்னரே இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-1)

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர்களுடனும் அரசாங்கத் தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சித் தலைவர்களுடனும் நடத்திய கூட்டங்களில் ஜனாதிபதி யோசனை வழங்கினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை மூத்த அமைச்சர்களுடன் முதலில் தேர்தல் குறித்து ஆராய்ந்தார்.

அதன்பின்னர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுடனும் அரசாங் கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடனும் தேர்தல் குறித்து ஆராய்ந் தார்.

அந்தச் சந்திப்புக்களில் -

பெரும் தேர்தல் ஒன்றுக்கு ஆயத்தமாகுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டாரேயன்றி முதலில் ஜனாதிபதி தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா என் பது குறித்து அசுமாத்தமாகவேனும் எதுவும் தெரிவிக்கவில்லை.

சந்திப்புக்களில் கலந்துகொண்டவர்கள் தானும் அது குறித்து ஜனாதிபதியிடம் எதிர்க் கேள்வி எதுவும் கேட்கவில்லை என்று மூத்த அமைச்சர் ஒருவர் சொன்னார்.ஆனால் எந்தத் தேர்தல் முதலில் வரும் என்பதனை எல்லோரும் தமக்குள் அனுமானிக்க முடிந்தது என்று மட்டும் குறிப்பிட்ட அமைச்சர் கூறினார்.

தேர்தல் ஒன்றை நடத்துவதற்குப் பிரசாரம் செய்வதற்கு, ஆதரவு திரட்டுவதற்கு அதிக காலம் தேவையா என்று ஜனாதிபதி கேட்டதற்கு மிகக் குறைந்த காலம் போதுமானது என்று அவர்கள் பதில் அளித்தனர். (அ)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ ஏ-9 பாதையூடாக பொதுமக்கள் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும், மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள், மக்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப் படவேண்டும்.

✱ வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அவர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான உதவிகளை வழங்க ஐ.நா. முன்வர வேண்டும்.

✱ குடாநாட்டில் வலி.வடக்கு உட்பட பல இடங்களில் உள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த ஐ.நா. உதவ வேண்டும்.

இங்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவதாக ஹோம்ஸ் தெரிவித்தார். (அ)

# ஓசியானிக் கப்பல் விவகாரம் முடிவுக்கு வருகிறது; 28 நாள்களின் பின்னர் 78 அகதிகளும் இறங்கச் சம்மதம்

கொழும்பு, நவ.18

அவுஸ்திரேலியாவை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 78 பேர் சம்பந்தப்பட்ட 'ஓசியானிக் வைகிங்' கப்பல் விவகாரம் சுமார் 28 நாள்களின் பின் தற்போது முடிவுக்கு வருகின்றது.

அகதிகளுக்கும் ஆஸி.அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இரு தரப்பினரும் அடிப்படையில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்துள்ளனர். இந்த அகதிகள் அனைவரும் இந்தோனேஷியாவிலுள்ள அகதி முகாமுக்குச் சென்று தங்கியிருக்க வேண்டும் என்றும் அதையடுத்து 12 வாரங்களுக்கு இடையில் அவர்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்றும் ஆஸி.வாக்குறுதி வழங்கவுள்ளது.

இந்நிலையில் அகதிகள் 78 பேரில் 22 பேர் கடந்தவாரம் கப்பலை விட்டு இறங்கி இந்தோனேஷியா முகாமில் சென்று தங்கியுள்ளனர். அதேநேரம், மிகுதி 56 பேரும் கப்பலை விட்டு இறங்கி இந்தோனேஷியா முகாமுக்குச் சென்று தங்கியிருக்கத் தற்போது இணங்கியுள்ளனர். சுமார் 28 நாள்களின் பின்னர் 'ஓசியானிக் கப்பல் விவகாரம்' ஒருவாறு முடிவுக்கு வருகின்றது. (அ-சி)

# துணுக்காய் பிரதேசத்தில் நாலாயிரம் ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள ஏற்பாடு

கொழும்பு, நவ. 18

முல்லைத்தீவின் துணுக்காய்ப் பிரதேசத்தில் பத்து நீர்ப்பாசனக் குளங்களை உள்ளடக்கியதாக சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய்ப் பகுதியில் நேற்று நடைபெற்ற சுமார் 300 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்ட கூட்டத்திலே யே அதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

விவசாய நிலப்பரப்புகளை உழுது, பயிர் செய்கையை மேற்கொள்ளவென அனைத்து உதவிகளையும் வழங்க விவ சாய அமைச்சும் பல்வேறு தொண்டர் அமைப்புக்களும் முன்வந்துள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (அ-7)

## மின்சார சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள நிலையில் தமது போராட்டம் எதிர் வரும் வெள்ளிக்கிழமைவரை நடைபெறும் என மின்சார சேவை சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலார் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மின்சார சபை அமைச்சருடன் இது குறித்துப் பேச்சுக்கள் இடம் பெறவுள்ளன எனவும் தெரிவித்தார்.

## மீள்குடியேற்றப்பட்ட

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் 50 வீதமானவர்கள் மீள்குடிய மர்த்தப்பட்டுள்ளனர். மழை அனர்த்தத்தில் இருந்து இதன்மூலம் ஓரளவாவது இம்மக்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர். இதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் வசதிக்குறைவாகவே வாழ்கின்றனர். வாழ்விடம், தொழில், நிவாரணம் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

### கைது செய்யப்படுவோர் எங்கே தடுத்து வைக்கப்படுகின்றனர்?

இதுபோக, குடியமர்த்தப்பட்ட குடும்பத் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றனர். புலனாய்வுப் பிரிவினர் என்று தம்மைக் கூறுபவர்களே இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

இவர்கள் உண்மையில் புலனாய்வுப் பிரிவினரா என்று தெரியாது. கைது செய்யப்பட்டவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியாது. கைது செய்பவர்கள் பொலிஸ் சீருடையில் இருந்தாலாவது பரவாயில்லை, குடும்பத்தவர்கள் ஓரளவாவது திருப்தியடைவர்.

### பெண்களிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி

ஆனால், கைது தொடர்பாக எந்த விவரமும் தெரியாது. இதனால், மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்கின்றனர். ஆண்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெண்களிடம் சிலர் தவறான முறையில் நடந்து கொள்ள முயற்சி செய்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதைப் பொலிஸாருக்குக் கூறினால், பொலிஸ் நிலையத்துக்கு வந்து முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் அம்மக்களைக் கேட்கின்றனர். முறைப்பாடு செய்தால் தமக்கு ஏதும் நடந்துவிடுமோ என்ற அச்சத்தில் அம்மக்கள் முறைப்பாடு செய்வதில்லை.

இந்த நிலைமை தொடர்பாக அரசு கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

LABOUR OFFICER
பரீட்சைக்கான
நுண்ணறிவு
புதன் (இன்று)
வியாழன் (நாளை)
2 - 6 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். போதனா
வைத்திய சாலை
எதிராக

## மன்றில் அமைச்சருக்கு திடீர் உடல் நலக்குறைவு

நாடாளுமன்றத்தில் நேற்று விவாதம் நடந்து கொண்டிருந்தபோது சுற்றுலாத்துறை அமைச்சர் நந்தன குணதிலகவுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டு அவர் சிறிது நேரம் அவதிப்பட்டார்.

அமைச்சர் நெஞ்சை கைகளால் பொத்திக் கொண்டு கண்களை இறுகமூடிக்கொண்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவரது அருகில் இருந்த அமைச்சர் சாலித்த திஸாநாயக்க, நந்தன குணதிலகவின் நெஞ்சைத் தடவிவிட்டார். அமைச்சர் டிலான் பெரேரா நாடாளுமன்ற உதவியாளர்கள் மூலம் குடிதண்ணீரை பெற்று நந்தன குணதிலகவைக் குடிக்கவைத்தார். பின்னர் அமைச்சர் ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பினார்.

## குடாநாட்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணைக்கு அதனை ஏற்பது என்று முடிவாயிற்று.

யாழ். பயணிகள் கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் செல்வதற்குப் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பு அனுமதியை முற்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

அப்படிப் பாதுகாப்பு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பத்துடன் கொழும்பிலோ அல்லது பிற இடங்களிலோ தாம் தங்கப்போகின்ற முகவரிதாரரின் விலாசத்தைக் குறிப்பிட்டு, அவரின் இணக்கத்தை அதற்குப் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

படைத்தரப்பு கட்டுப்பாடு விதித்திருக்கின்றது எனக் குறிப்பிட்டு, அதனை ஆட்சேபித்து இந்த மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

மனுவில் எதிர்மனுதாரர்களாக யாழ்.படைகளின் கட்டளைத்தளபதி, இராணுவத் தளபதி,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பதவி வழியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நேற்று இந்த மனு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது தமது மனுவின் சார்பில் சட்டத்தரணி விநாயகமூர்த்தி ஆஜரானார். அரசுத் தரப்பில் அரச சட்டத்தரணி குணரட்ன ஆஜரானார்.

மனுவைப் பரிசீலித்த மேற்படி உயர் நீதிமன்ற ஆயத்தின் சிரேஷ்ட நீதியரசரான சலீம் மர்சூக், யாழ். பயணிகளுக்கு இத்தகைய கெடுபிடிக் கட்டுப்பாட்டை விதிப்பதற்கு சட்டத்தில் இடமுண்டா, அதற்கான சட்ட விதி எது என அரச சட்டத்தரணியிடம் கேட்டார். எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதிக்கு முன்னர் இப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காணப்படாவிட்டால், இந்த வழக்கை நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் என்றும் குறிப்பிட்டு வழக்கை அத்திகதிக்கு அவர் ஒத்திவைத்தார். (அ-சி)

வேலை ஆள் தேவை

புத்தகம் கட்டுனர், பான்சி கடை கொம்பியூட்டர் ரைப்பிங் என்பவற்றிற்கு ஆள்கள் (பெண்கள்) தேவை.

ராம் கொம்பியூட்டர் பிறின்டிங் சென்ரர்
பரமேஸ்வரராச் சந்தி, இராமநாதன் வீதி,
91172) திருநெல்வேலி.

தேவை

எமது நிறுவனத்திற்கு சிற்றூழியர் தேவை நேரில் வரவும்.

மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்,
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org